# பகுதி II


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | I – LVIII |
| ஆளணி | LVIII – LX |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | I |
| நாணய வெளியீடு | XI |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | XII |
| வங்கி மேற்பார்வை | XV |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | XVII |
| அபிவிருத்தி நிதி | XIX |
| கிராமியக் கொடுகடன் | XXXII |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | XXXVII |
| கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி | XL |
| ஊழியர் சேமநிதியம் | XLI |
| செலாவணிக் கட்டுப்பாடு | XLIII |
| பொதுப் படுகடன் | XLV |
| பிரதேச அலுவலகங்கள் - மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | XLVIII |
| செயலகம் | XLIX |
| தகவலும் வெளியீடுகளும் | XLIX |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | LI |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்புகளும் | LI |
| தரவு செய்முறைப்படுத்தல் | LIII |
| பயிற்சி | LV |
| முகாமைத்துவ கணக்காய்வு | LV |
| பணிமனை | LVI |
| நலன்புரி | LVII |
| பாதுகாப்புப் பணிகள் | LVIII |
| ஆளணி | LVIII |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

1994 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் ரூ. 1,559,570 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டினைவிட 16.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1992 இனைவிட 1993 இல் வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 32 சதவீதமாக இருந்தது. 1994 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1994 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பக்கத்தில், வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு ரூ. 758,960 இலட்சத்திலிருந்து ரூ. 952,820 இலட்சத்திற்கு 25.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பன்னாட்டு ஒதுக்கு மிகப்பெரும் சொத்து வகையாக அமைந்து மொத்தச் சொத்துக்களில் இது 1993 இறுதியின் 56.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 61.1 சதவீதத்திற்கு வகைகூறியது. உள்நாட்டுச் சொத்துக்கள், மற்றும் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் மிதமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 302,730 இலட்சத்திலிருந்து ரூ. 317,550 இலட்சத்திற்கு 4.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 274,650 இலட்சத்திலிருந்து ரூ. 289,210 இலட்சத்திற்கு 5.3 சதவீதத்தினால் அதிகரித்தன.

உள்நாட்டுச் சொத்துக்களில், அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அரச உத்தரவாதப் பிணைகளும் முறையே 8.9 சதவீதத்தினாலும் 29.0 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்குமான நடுத்தர, நீண்டகால கொடுகடன் வசதிகள் 20.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய மீள் கொடுப்பனவுகளும் செயற்படா கடன்களின் பேரிலான ஒதுக்கங்களுமே காரணமாகும். இவ்வாண்டுக் காலத்தில் குறுங்கால மீள்நிதியிடல் திட்டங்கள் புறக்கீடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் 90.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 359,490 இலட்சத்திலிருந்து ரூ. 430,810 இலட்சத்திற்கு 19.8 சதவீதத்தினால் அதிகரித்தது. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. மத்திய வங்கியுடனான மொத்த வைப்புக்கள் ரூ. 514,610 இலட்சத்திலிருந்து ரூ. 610,230 இலட்சத்திற்கு உயர்ந்து 18.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. பொறுப்புக்களில் வைப்புக்கள் தனியொரு பெரும் வகையாக தொடர்ந்தும் இருப்பதுடன் மொத்தப் பொறுப்புக்களில் 39.1 சதவீதத்திற்கும் வகைகூறின. இவ்வகையில், வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 21.3 சதவீதத்தினால் அதிகரித்தன. பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்களின் வைப்புக்கள் 14.6 சதவீதத்தினால் அதிகரித்தன.

# இலங்கை மத்திய வங்கியின்
## 1993 திசெம்பர் 31 இலும்

| 1993 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1994 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதனக் கணக்குகள்** | | |
| 15,000,000 | | மூலதனம் | 15,000.000 | |
| 985,000,000 | 1,000,000,000 | மிகை | 985,000,000 | 1,000,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 34,579,420,385 | | தாள்கள் | 41,496,102,836 | |
| 1,369,856,920 | 35,949,277,305 | குத்திகள் | 1,584,959,668 | 43,081,062,504 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,800,560,301 | | அரசு | 2,812,322,857 | |
| 52,469,885 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் | 141,639,414 | |
| 20,466,190,194 | | வர்த்தக வங்கிகள் | 24,832,127,774 | |
| 28,291,350,601 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் | 32,430,115,310 | |
| 182,897 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 31,606,400/- நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதியம் | 1,199,835 | |
| 850,730,033 | 51,461,483,911 | ஏனையவை | 805,289,256 | 61,022,694,446 |
| | 4,925,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | | 4,925,000,000 |
| | 560,250,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு | | 560,250,000 |
| | 2,155,000,000 | மத்திய வங்கிப் பிணைகள் | | 3,740,000,000 |
| | 37,583,269,681 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 41,628,492,604 |
| | 133,634,280,897 | | | 155,957,499,554 |

## 1994 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1993 திசெம்பர் 31 | | 1994 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 11,097,761,934 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | 24,279,878,851 |
| | **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | |
| 1,000,000,000 | நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வர வேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு. | 1,400,000,000 |
| 12,097,761,934 | | 25,679,878,851 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு :**

1994 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971 இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் 1949 இன் எண் 58 கொண்ட நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு - 7.
1995, ஏப்பிறல் 24

எஸ். எம். சப்றி

கணக்காய்வாளர் நாயகம்

# பொதுவான ஐந்தொகையின் ஒப்பீடு

## 1994 திசெம்பர் 31 இலும் உள்ளவாறு

| 1993 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1994 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்குகள்** | | |
| 17,603,300,568 | | வெளிநாட்டில் உள்ள பணங்களும், நிலுவைகளும் | 12,617,630,949 | |
| 58,273,522,029 * | | வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 82,647,583,119 * | |
| 18,890,383 | 75,895,712,980 | சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் | 16,541,327 | 95,281,755,395 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| 20,855,499,947 | | கடன்களும் முற்பணங்களும் அரசிற்கு | 22,718,899,947 | |
| 4,150,604,897 ** | | ஏனையவற்றிற்கு - நடுத்தர, நீண்டகால | 3,304,188,300 ** | |
| 752,605,641 | | குறுங்கால | 72,230,621 | |
| 3,954,212,029 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் | 5,099,546,732 | |
| 560,250,000 | 30,273,172,514 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் | 560,250,000 | 31,755,115,600 |
| | 27,465,395,403 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் | | 28,920,628,559 |
| | 133,634,280,897 | | | 155,957,499,554 |

* அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூ. 5,527,675/- முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24 இல் ரூ. 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,933,697/- ஆகவும், ரூ. 34,340/- ஆகவும் இருந்தன.)

** ரூ. 1,000 இலட்சம் கொண்ட சிறப்புக் கடனை உள்ளடக்கும். வெளிநின்ற தொகை கடன் இழப்புகளுக்கான ஒதுக்கங்கள் நீங்கலானதாகும்.

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1993 திசெம்பர் 31 | | 1994 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 12,097,761,934 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 25,679,878,851 |
| 12,097,761,934 | | 25,679,878,851 |

**எச். பீ. திசநாயக்க**
ஆளுநர்

**எம். பீ. திசாநாயக்க**
முதன்மைக் கணக்காளர்

## அட்டவணை 2.2

### மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு
### 1993, 1994 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

| பொறுப்புக்கள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | 1993 | | 1994 | | விடயம் | 1993 | | 1994 | |
| | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % | | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % |
| மூலதனமும் மிகையும் ... | 1,000.0 | 0.8 | 1,000.0 | 0.6 | பன்னாட்டு ஒதுக்கு ... | 75,895.7 | 56.8 | 95,281.8 | 61.1 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... | 35,949.3 | 26.9 | 43,081.1 | 27.6 | | | | | |
| வைப்புக்கள் ... | 51,461.5 | 38.5 | 61,022.7 | 39.1 | உள்நாட்டுச் சொத்துக்கள் ... | 30,273.2 | 22.7 | 31,755.1 | 20.4 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | 4,925.0 | 3.7 | 4,925.0 | 3.2 | | | | | |
| மூலதன உதவு தொகை க/கு ... | 560.3 | 0.4 | 560.2 | 0.4 | ஏனைய சொத்துக்கள் ... | 27,465.4 | 20.5 | 28,920.6 | 18.5 |
| மத்திய வங்கிப் பிணைகள் ... | 2,155.0 | 1.6 | 3,740.0 | 2.4 | | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் ... | 37,583.2 | 28.1 | 41,628.5 | 26.7 | | | | | |
| மொத்தம் ... | 133,634.3 | 100.0 | 155,957.5 | 100.0 | மொத்தம் ... | 133,634.3 | 100.0 | 155,957.5 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1994 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருவாய் ரூ. 256,800 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 112.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வங்கியின் வருவாயில் ஏற்பட்ட உயர்ந்த மட்ட வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டியே பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. எனினும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் மீது உழைக்கப்பட்ட வட்டி வீழ்ச்சியடைந்து உள்நாட்டுச் சொத்துக்களின் குறைந்த பங்கினைப் பிரதிபலித்தது. செலவு மற்றும் ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்குகள் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றிற்கு இடமளித்த பின்னர் மீதியாக இருந்த வங்கியின் தேறிய இலாபமான ரூ. 14,000 இலட்சங் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனக் குறித்தொதுக்கப்பட்டது.

## கணக்கிடல் கொள்கைகள்

### 1. பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிடல் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளது.

### 2. வெளிநாட்டு நாணயமாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

### 3. முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 4. முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்து வரவேண்டிய செயலாற்றமில்லாக் கடன்களுக்கான ஒதுக்கங்களைக் கழித்துப் பெறப்பட்டன.

### 5. நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் செலவினத்தில் தேய்மானத்தைக் கழித்துக் காட்டப்பட்டுள்ளன. தேய்மானம் குறைந்து செல்லும் மீதி முறையில் பின்வரும் வீதங்களில் விதிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் | - | 2 சதவீதம் |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | - | 10 சதவீதம் |

| | | |
|---|---|---|
| அலுவலகத் தளபாடங்களும் | | |
| கருவிகளும் | – | 10 சதவீதம் |
| உந்து ஊர்திகள் | – | 10 சதவீதம் |
| தனியாள் கணனிகள் | – | 25 சதவீதம் |

நிலையான சொத்துக்களுக்கு வழங்கப்பட்ட தேய்மானம் அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமானதாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

## 6. இருப்புக்கள்

எழுதுகருவி வகைகள் மற்றும் பொறியியற் களஞ்சியங்கள் மீது ஆண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு இலாப நட்டக் கணக்கில் கழிக்கப்பட்டதுடன் முடிவு இருப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## 7. வருமானவரிக் கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாத கடன்கள் மீதான வட்டி தவிர, ஏனைய வட்டியும் வருமானங்களும் ஏடுகளில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

## 8. மத்திய வங்கிப் பிணைகள் மீதான கழிவுகளும் கட்டுப் பணங்களும்

இவ்வாண்டுக் காலத்தில் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணைகள் மீது அனுமதிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பெறப்பட்ட கட்டுப்பணங்கள் என்பன, இப்பிணைகள் முதிர்ச்சியடையும் நாளைக் கருத்திற் கொள்ளாது ஆண்டிற்கான இலாபநட்டக் கணக்கில் கணக்கிடப்படுகின்றன.

## 9. தேறிய இலாபம்

அனைத்து செலவுகளையும் பின்வரும் ஒதுக்கங்களையும் செய்த பின்னரே இலாப நட்டக் கணக்கில் தேறிய இலாபம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

(i) செயற்படாத கடன்களுக்கான ஒதுக்கம்

(ii) நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானத்திற்கான ஒதுக்கம்

(iii) நாணய விதிச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்குகளுக்கான ஏனைய அவசியமான ஒதுக்கங்களும் ஒதுக்கீடுகளும்.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி இலங்கை ரூபாவிற்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலரின் உடன்வாங்கும் விற்கும் வீதங்களையும் முன்மாற்றுக் கொள்வனவுகளையும்

தீர்மானிப்பதன் வாயிலாக வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

கடந்த காலங்களைப் போன்றே, மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை பன்னாட்டு பண மற்றும் மூலதனச் சந்தைகளில் முதலீடு செய்தது.

### அட்டவணை 2.3

### 1994 இல் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

(ரூபாய்களில்)

| மாதம் | உடன் கொள்வனவுகள் | உடன் விற்பனைகள் | முன்மாற்றுக் கொள்வனவுகள் |
|---|---|---|---|
| சனவரி | 4,960,714,637.50 | | |
| பெப்புருவரி | 4,110,982,600.00 | | |
| மாச்சு | 4,754,428,150.00 | 172,803,750.00 | 788,120,000.00 |
| ஏப்பிரல் | 2,522,965,162.00 | | |
| மே | 7,408,875.00 | | |
| யூன் | 1,655,345,625.00 | | |
| யூலை | 2,610,237,350.00 | | |
| ஓகத்து | 1,921,872,837.50 | | |
| செத்தெம்பர் | 2,908,911,000.00 | | |
| ஒற்றோபர் | 3,707,891,750.00 | | |
| நவெம்பர் | 268,432,500.00 | 442,249,000.00 | |
| திசெம்பர் | 1,234,345,000.00 | | |
| மொத்தம் | 30,663,535,487.50 | 615,052,750.00 | 788,120,000.00 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

| | |
|---|---|
| கொள்வனவுகள் | 31,451,655,487.50 |
| விற்பனைகள் | 615,052,750.00 |

1994 இல் மத்திய வங்கியினால் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் மொத்தப் பெறுமதி ரூ. 314,517 இலட்சமாக விளங்கிய வேளையில் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணய விற்பனை ரூ. 6,151 இலட்சமாகக் காணப்பட்டது. ஒப்பிடுகையில் 1993 இல் இவ்விரு தொகைகளும் முறையே ரூ. 313,324 இலட்சமாகவும் ரூ. 9,146 இலட்சமாகவும் காணப்பட்டன.

## தங்கம் மற்றும் வெள்ளி விற்பனை

மத்திய வங்கி அதன் தலைமை அலுவலகத்தில் தங்கம் மற்றும் வெள்ளி விற்பனையைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1994 இல் தலைமை அலுவலக விற்பனை பீடத்தில் விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின் மொத்தப் பெறுமதி 1993 இன் ரூ. 95 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 121 இலட்சமாக விளங்கியவேளையில் வெள்ளியின் மொத்த விற்பனை 1993 இன் ரூ. 27 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 2 இலட்சமாகக் காணப்பட்டது.

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1994 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 227,350 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 371,952 இலட்சமாக விளங்கியது. 1994 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1993 இன் ரூ. 74,240 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 138,337 இலட்சமாக விளங்கியது. 1994 மேயில் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய தீர்ப்பனவு பொறிமுறைக்கு வெளியே ஈரானுடன் அனைத்து ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் (வங்கிவீதம்) ஆண்டொன்றுக்கு 17 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

## குறுங்காலக் கொடுகடன்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டம் என்பனவற்றின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகள் முறையே 1994 ஏப்பிறல் 1 ஆம் நாளன்றும் மே 31 ஆம் நாளன்றும் நிறுத்தப்பட்டன. எனினும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் வேளாண்மைக் கடன் பெறுநர்களுக்கு சுழலும் கடன் வசதியை வழங்கிய வர்த்தக வங்கிகளுக்கு சுழலும் கடன் தொகையின்மீது மீள்நிதியிடல் வசதிகள் வழங்கப்பட்டன. 1994 இறுதியில் இவ்வசதியின் கீழ் வெளிநின்ற தொகை ரூ. 722 இலட்சமாகும். பல்வேறுபட்ட குறுங்கால மீள்நிதியிடல் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான குறுங்கால மீள்நிதியிடலின் தொகை 1993, 1994 இறுதியிலுள்ளவாறு கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4

மீள் நிதியிடல் கடன்களின் வெளிநின்ற தொகைகள் (குறுங்காலம்)

ப. இ. ரூபாய்களில்

| திட்டம் | | 1993 | 1994 |
|---|---|---|---|
| புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | ... | 582.9 | 72.2 |
| ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டம் | | | |
| வகை I | ... | 33.2 | இல்லை |
| வகை II | ... | 107.2 | இல்லை |
| நெல் மற்றும் ஏனைய பயிர்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான திட்டம் | ... | 26.2 | இல்லை |
| தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரருக்கான சிறப்பு மீள்நிதியிடல் வசதி | ... | 3.1 | இல்லை |
| மொத்தம் | | 752.6 | 72.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம் 1994 இல் ரூ. 49,250 இலட்சமாக அமைந்து மாற்றமின்றிக் காணப்பட்டது. இவ்வாண்டில் பகிர்ந்தளிப்பு நீங்கலாக மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 5,620 இலட்சமாகக் காணப்பட்டது.

## நிதிக்கூட்டு நிலையங்களுக்கான கடன் வழங்கல்

1988 இன் 78 ஆம் இலக்க நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 20 (4) (அ) மற்றும் 21 (1) இன் நியதிகளின்படி மத்திய வங்கி நிதிக்கூட்டு நிலையங்களுக்கு தொடர்ந்தும் நிதியியல் கடன்களை வழங்கியது. 1994 இல் இவ்வசதியின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,540 இலட்சமாகவும் 1994 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகை ரூ. 23,040 இலட்சமாகவும் காணப்பட்டது.

## ஒதுக்குத் தேவைகள்

வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைகள் 1994 பெப்புருவரி 18 ஆம் நாளிலிருந்து திருத்தப்பட்டன.

வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை ஆண்டு முழுவதும் 15 சதவீதத்தில் நிலையாக இருந்தது. எனினும் இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்ட வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவை 1994 பெப்புருவரி 18 ஆம் நாளிலிருந்து 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வெளிநாட்டு நாணய வடிவில் பேணப்படும் வர்த்தக வங்கிகளின் அனைத்து வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத் தேவை இவ்வாண்டில் 15 சதவீதத்தில் நிலையாக இருந்தது.

## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

### இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனை 1993 இன் ரூ. 94.8 பில்லியனிலிருந்து 1994 இல் ரூ. 21.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் கொள்வனவுகளும் ரூ. 46.9 பில்லியனிலிருந்து ரூ. 18.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. விற்பனைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு குறுங்கால முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவுச் சந்தைக்கு மாற்றமடைந்தமையும் மத்திய வங்கிப் பிணைகளின் விற்பனைகளும் முக்கிய காரணமாகும்.

இவ்வாண்டில், இரண்டாந்தரச் சந்தையில் மூன்றுமாத திறைசேரி உண்டியல்களின் முதலீடுகள் மீதான பொருந்தத்தக்க விளைவு வீதங்கள் ஆண்டிற்கு 17.26 சதவீதத்திற்கும் 20.07 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

### திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை

இவ்வாண்டில் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் விற்பனையைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இத்திட்டத்தின்கீழ் 1994 இல் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ. 230.9 பில்லியனாக விளங்கியது. ஆண்டின் தொடக்கத்தில் 16.5 சதவீதத்தில் இருந்த ஓர் இரவு மீள்கொள்வனவு விளைவு வீதம் ஒற்றோபர் நடுப்பகுதியில் 7 சத வீதத்திற்குப் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. எனினும் ஆண்டின் இறுதிப்பகுதியில் திரவ நிலைமைகள் படிப்படியாக இறுக்கமடைந்து இரவு மீள் கொள்வனவு விளைவு வீதம் 1994 திசெம்பர் இறுதியில் 20 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

### இந்தியாவிற்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதல் தொடர்பான கொடுப்பனவுத் திட்டங்களை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழான மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1993 இன் ரூ. 276,609.24 உடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 112,785.72 ஆக விளங்கியது. வெகுமதிக் கொடுப்பனவு 1993 இன் ரூ. 38,775 உடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 32,175 ஆகக் காணப்பட்டது.

### ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்கு செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வை தள்ளுபடிகள் தொடர்பான வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப்பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1993 இன் ரூ. 7,846 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 8,397 இலட்சங்கொண்ட மொத்தத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டது.

### கட்டாயச் சேமிப்புக்கள் நிதியம்

மத்திய வங்கி, 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்சவரம்பு, கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அரசின் சார்பில் கட்டாயச் சேமிப்புக்கள் நிதியத்தினையும் நிருவகித்தது. இவ்வாண்டில் 8 உதவுநர்களினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மீது வங்கி ரூ. 0.5 இலட்சத்தினை (வட்டி உட்பட) செலுத்தியது.

### அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்ற வகையில் அரச திணைக்களங்கள் அரச முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணியது. 1994 திசெம்பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 1993 இறுதியின் 184 உடன் ஒப்பிடுகையில் 178 ஆக விளங்கியது.

### வெளிநாட்டு நிதி

ஆய்விற்குரிய ஆண்டில், மத்திய வங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள், கொடைகள் என்பனவற்றின் கீழ் கிடைக்கத்தக்கதாக இருந்த பகிர்ந்தளிப்புக்களை தொடர்ந்தும் பெற்றவேளையில் அரசின் சார்பில் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டது.

## நாணய வெளியீடு

1994 இல் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பயன்பாட்டுக்காக இலங்கையில் சட்டரீதியான நாணய வழங்கல் பணியினை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1994 இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தின் அளவு ரூ. 430,810 இலட்சமாக விளங்கியது. சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தாள்கள் சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தில் 96 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

ரூபா இரண்டு இனத்திலமைந்த ஞாபகார்த்த தரத்திலான பொதுச் சுற்றோட்ட நாணயக்குத்தி ஒன்றை வெளியிடுவதற்கு வங்கி ஒழுங்குகளைச் செய்துள்ளது. உணவு வேளாண்மை அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா தொடர்பாக 1995 யூன் நடுப்பகுதியில் இந்த நாணயக்குத்தி பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

ரூ. 100 இன, ரூ. 500 இனத்தாள்களின் வண்ண அமைப்பில் காணப்படும் ஒத்த தன்மை தொடர்பாக பொதுமக்களின் நன்மையினைக் கருத்திற்கொண்டு தற்போது சுற்றோட்டத்திலுள்ள இலங்கையின் மரபுவழித் தொடரின் ரூ. 100/- நாணயத்தாளின் பின் பக்கத்தின் வண்ண அமைப்பினை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய நாணயத்தாள் 1994 திசெம்பரில் பொதுச் சுற்றோட்டத்தில் விடப்பட்டது.

*1992 இல் தன்னியக்கப்படுத்தப்பட்ட நாணயச் செயல்முறைத் திட்டம் 1994 இல் தொடர்ந்தும் தொழிற்பட்டது. இலங்கை மரபுத் தொடரின் நாணயத்தாள்களின் புதிய வடிவமைப்பினை செயல்முறைப்படுத்துவதற்காக வேண்டி இந்த முறையானது மீளமைப்புச் செய்யப்பட வேண்டியிருந்தமையினால் மீளமைப்புச் செயல்முறையை எய்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.*

*1992 இல் தொடக்கி வைக்கப்பட்ட வங்கியின் இடம்பெயர் நாணயக் கண்காட்சி 1994 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. உலகின் அனைத்து நாடுகளினதும் நாணயத்தாள்களின் மாதிரிகள், போலி நாணயத்தாள்கள் மற்றும் குறைபாடுகளுடன் அச்சிடப்பட்ட இலங்கை நாணயத்தாள்கள் என்பன 1994 இல் இடம்பெயர் நாணயக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.*

## வங்கித் தொழில் அபிவிருத்தி

### கிளை விரிவாக்கம்

*1994இல் அபிவிருத்தி வங்கிகளையும் சேமிப்பு வங்கிகளையும் உள்ளடக்கிய வங்கித் தொழில் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆக மாறாது காணப்பட்டது. 1994 இறுதியில் வங்கித்தொழில்முறை 23 வர்த்தக வங்கிகளையும் (6 உள்நாட்டு வர்த்தக வங்கிகளும் 17 வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும்) 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் (பிகிஅவ) 3 அபிவிருத்தி வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கி ஒன்றினையும் உள்ளடக்கியிருந்தது. 1994 இல் மிடில்ஈஸ்ட் வங்கியின் (மிஈவ) கொழும்புக் கிளையின் உடைமை முஸ்லீம் கொமர்சல் வங்கியினால் கையேற்கப்பட்டது.*

*வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ) என்பனவற்றின் கிளைவலையமைப்பு தொடர்ந்து விரிவடைந்தது. நடைமுறையாண்டில் 45 புதிய கிளைகள் தொழிற்பாட்டிற்கு வந்ததோடு கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,147 ஆக அதிகரிக்கப்பட்டது. 1993 உடன் ஒப்பிடுகையில் இது 3.9 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.*

*1994 இல் இலங்கை வங்கி தப்பிரபோன் கிளை என்ற பெயரில் புதிய கிளையொன்றினைத் திறந்ததுடன் இதுவரை யோர்க் வீதி கிளையில் பேணப்பட்டுவந்த அரச கணக்குகள் இப்புதிய கிளைக்கு மாற்றப்பட்டன. வாரியப்பொல, பதவிய (பராக்கிரமபுரம்) ஆகிய இடங்களில் அமைந்திருந்த வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் (வேபநி) "சி" தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டன. இலங்கை வங்கி அபிவிருத்தி லொத்தர் நிலையத்திலும் மொரட்டுவை பல்கலைக் கழகத்திலும் விரிவாக்க அலுவலகங்கள் இரண்டினை ஆரம்பித்ததுடன் இவ்வங்கியினால் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் தகவல் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டது. இதே வேளையில் மாணிக்கக்கல் மற்றும் ஆபரணப் பரிவர்த்தனை நிலையத்தில் அமைந்திருந்த விரிவாக்க அலுவலகம் இவ்வாண்டில் மூடப்பட்டது. இம்மாற்றங்களின் விளைவாக ஆண்டின் இறுதியில் இலங்கை வங்கியின் கிளைகளின் எண்ணிக்கை 337 ஆக அமைந்து 262 பிரதான கிளைகளையும் 27 வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளையும் 23 கச்சேரிக் கிளைகளையும் 23 விரிவாக்க அலுவலகங்களையும் 2 வெளிநாட்டுக் கிளைகளையும் உள்ளடக்கியிருந்தது.*

## அட்டவணை 2.5
## வங்கித் தொழில் நிறுவனங்களின் அமைப்பும் வங்கிக் கிளைகளின் பரம்பலும் 1990 – 1994

| வகை | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 40 | 42 | 43 | 44 | 44 |
| 1.1. வர்த்தக வங்கிகள் ... | 24 | 23 | 23 | 23 | 23 |
| 1.1.1 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் ... | 6 | 6 | 6 | 6 | 6 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகள் ... | 18 | 17 | 17 | 17 | 17 |
| 1.2. பி. கி. அ. வங்கிகள் (அ) ... | 12 | 15 | 16 | 17 | 17 |
| 1.3. சேமிப்பு வங்கிகள் ... | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1.4. அபிவிருத்தி வங்கித் தொழில் நிறுவனங்கள் (அ. வ. நிறுவனங்கள்) ... | 3 | 3 | 3 | 3 | 3 |
| 2. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 924 | 973 | 1,058 | 1,102 | 1,148 |
| 2.1. வர்த்தக வங்கிக் கிளைகள் ... | 747 | 768 | 818 | 854 | 889 |
| 2.1.1. உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் ... | 724 | 743 | 789 | 821 | 853 |
| (i) முதன்மைக் கிளைகள் ... | 638 | 656 | 699 | 733 | 763 |
| (ii) வே.ப.நி. கிளைகள் .. | 38 | 36 | 34 | 29 | 27 |
| (iii) கச்சேரிக் கிளைகள் ... | 23 | 24 | 24 | 24 | 23 |
| (iv) விரிவாக்க / கொடுப்பனவு அலுவலகங்கள் / அடைவு நிலையங்கள்* | 23 | 25 | 30 | 33 | 38 |
| (v) வெளிநாட்டுக் கிளைகள் (இ) ... | 2 | 2 | 2 | 2 | 2 |
| 2.1.2. வெளிநாட்டு வங்கிக் கிளைகள் ... | 23 | 25 | 29 (ஈ) | 33 (ஈ) | 36 (ஈ) |
| 2.2. பி. கி. அ. வ. கிளைகள் ... | 101 | 124 | 156 | 163 | 169 |
| 2.3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் ... | 76 | 81 | 84 | 85 | 90 |
| 3. கிளைகளின் / அ. வ. நிறுவன அலுவலகங்களின் எண்ணிக்கை (உ) ... | 6 | 7 | 7 | 6 | 7 |
| 3.1 இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம் (இ. அ. நி. கூ.) | 3 | 3 | 3 | 3 | 4 |
| 3.2. அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.) ... | 2 | 3 | 3 | 2 | 2 |
| 3.3. தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.) | 1 | 1 | 1 | 1 | 1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிகிஅவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

(ஆ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் நீங்கலாக.

(இ) இலங்கை வங்கியின் இரு வெளிநாட்டுக் கிளைகள் (லண்டன், மாலே கிளைகள்)

(ஈ) கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பறேசனின் மூன்று துணைக் கிளைகள் உட்பட.

(உ) அ.வ. நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களும் கிளைகளும் உட்பட.

* மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத் வங்கி என்பனவற்றின் எல்லா விரிவாக்க / கொடுப்பனவு அலுவலகங்களையும் அடைவு நிலையங்களையும் உள்ளடக்குவதற்காகத் திருத்தப்பட்டது.

மக்கள்வங்கி காரைதீவுக் கிளையினை மீண்டும் ஆரம்பித்தமைக்கு மேலதிகமாக குருநாகல் (எதுகல்புர), நுகேகொட (நகரக்கிளை) கல்கிசை ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்தது. 1994 இல் மக்கள் வங்கி நுகேகொட, மாத்தளை ஆகிய இடங்களில் நகை அடைவு பிடிக்கும் நிலையங்கள் இரண்டினையும் ஆரம்பித்தோடு திருகோணமலை உள்துறைமுகக் கிளையினை மூடியது. இதன்படி நடைமுறையாண்டின் இறுதியில் மக்கள் வங்கியின் பிரதான கிளைகளின் எண்ணிக்கை 323 இற்கும் நகை அடைவு பிடிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 6 இற்கும் அதிகரித்த வேளையில் 1994 இல் விரிவாக்கக் கிளைகளின் எண்ணிக்கை 3 ஆக மாறாது காணப்பட்டது.

மொனராகல, கிரிபத்கொட, பொரளை ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்ததன் மூலம் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி அதனது கிளையமைப்பை 54 இற்கு அதிகரித்தது. அட்டன் நசனல் வங்கியின் இடம்பெயர் வங்கிகள் (3) விரிவாக்க மற்றும் கொடுப்பனவு அலுவலகங்கள் (2) என்பனவற்றின் எண்ணிக்கை இவ்வாண்டில் மாறாது காணப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி மினுவாங்கொட, பாணந்துறை, கொழும்பு ஆகிய இடங்களில் 3 புதிய கிளைகளைத் திறந்து 1994 இறுதியில் அதனது கிளைகளின் எண்ணிக்கையை 34 ஆக அதிகரித்துக்கொண்டது. சம்பத் வங்கி இரத்மலானை, பிலியந்தல, எகலியகொட ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்து 1994 இறுதியில் அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 18 ஆக அதிகரித்துக் கொண்டது. செலான்வங்கி வெலிமட, கொச்சிக்கடை, புறக்கோட்டை, பெலிஅத்த, மாலபே, மத்துகம, கொழும்பு தெற்கு, வரக்காபொல ஆகிய இடங்களில் 8 புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் அதனது கிளைகளை 72இற்கு அதிகரித்துக் கொண்டதுடன் ரத்தொலுகம (கம்பஹா), கனேமுல்ல, வெலிவேரிய, கொட்டகல (நுவெரலியா), பொகவன்தலாவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதனது இடம் பெயர் வங்கித்தொழில் நிலையங்களை முழுமையான கிளைகளின் தரத்திற்கு தரமுயர்த்தியது. நடைமுறையாண்டில் வரையறுக்கப்பட்ட செலான்வங்கி மொரட்டுவையில் காசு வைப்பு நிலையமொன்றையும் மகரகம ஆர்ப்பிகோ ஆலையில் விரிவாக்க அலுவலகம் ஒன்றையும் திறந்தது.

கண்டியில் கிளையொன்றினைத் திறந்ததன் மூலம் 1994 இல் ஏஎன்இஸட் கிரின்லேஸ் வங்கி தனது கிளையமைப்பை விரிவாக்கியது. 1994 இல் கொங்கொங் சங்காய் வங்கியும் பொரளையில் கிளையொன்றினைத் திறந்தவேளையில் கபீப் வங்கி ஏஜீசூரிச் கொள்ளுப்பிட்டியிலுள்ள அதனது நாணய மாற்றல் பிரிவினை முழுமையான கிளையொன்றின் தரத்திற்கு தரமுயர்த்தியது. இவ்விரிவாக்கங்களுடன் 1994 இறுதியில் வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 35 இற்கு அதிகரிக்கப்பட்டது.

1994 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பிகிஅவ) தமது கிளையமைப்பினை தொடர்ந்தும் விரிவாக்கின. பதுளை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி மீககிவுல, லுணுகல, கல்துமுல்ல, கிராந்துருக்கோட்டை ஆகிய இடங்களில் 4 புதிய கிளைகளைத் திறந்ததுடன் அதனது கிளைகளின் எண்ணிக்கையை 13 ஆக அதிகரித்துக்கொண்டது. கம்பகா, கேகாலை, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் 1994 இல் ஒவ்வொரு கிளைகளைத் திறந்தன. பிரதேச கிராமிய

அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1993 இன் 163 இலிருந்து 1994 இல் 169 இற்கு அதிகரித்தது.

தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ) கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை, பலாங்கொடை, கம்புறுப்பிட்டிய ஆகிய இடங்களில் 5 புதிய கிளைகளைத் திறந்ததுடன் 1994 இறுதியில் அதனது தொழிற்பாட்டுக்கிளைகளின் எண்ணிக்கையினை 90 ஆக அதிகரித்தது. தேசிய அபிவிருத்தி வங்கியினதும் (தேஅவ) அரசஈட்டு முதலீட்டு வங்கியினதும் (அஈமுவ) கிளையமைப்பு மாறாது காணப்பட்டவேளையில் 1994 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இஅநிகூ) குருநாகலில் கிளையொன்றினைத் திறந்தது.

### இடம்பெயர் வங்கித் தொழில் நிலையங்கள்

வங்கித் தொழில் வசதிகள் அற்ற அல்லது குறைவான வசதிகளைக் கொண்ட பிரதேசங்கில் வாழும் மக்களுக்கு வங்கித் தொழில் தேவைகளை வழங்குவதற்காக இரண்டு அரச வங்கிகளையும் அடக்கிய சில வர்த்தக வங்கிகளும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் தொடர்ந்தும் இடம் பெயர் வங்கித் தொழில் வசதிகளை வழங்கின.

### தன்னியக்கக்கூற்றுப் பொறிகளின் நிறுவல்

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி என்பனவற்றினால் தன்னியக்கக் கூற்றுப்பொறிகளின் நிறுவல் 1994 இல் மேலும் விரிவாக்கப்பட்டது. மக்கள் வங்கி நுவரெலியா, இரத்தினபுரி, கம்பகா, நீர்கொழும்பு, பொரளை, மாத்தறை, அநுராதபுரம், மற்றும் கொழும்பு புகையிரத நிலையம் ஆகிய இடங்களில் உள்ள அதனது கிளைகளில் 8 தன்னியக்க கூற்றுப் பொறிகளை நிறுவியது. இதேவேளையில் இலங்கை வங்கி பேலியகொட, இடம, களுத்துறை, நீர்கொழும்பு, கம்பகா மற்றும் கண்டி சிறப்புத்தர கிளை ஆகிய கிளைகளில் 6 தன்னியக்கக்கூற்றுப் பொறிகளை நிறுவியது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி மினுவாங்கொடை, கெய்சர்வீதி, நகரக்கிளை ஆகிய கிளைகளில் 3 தன்னியக்க கூற்றுப்பொறிகளை நிறுவியது. செலான்வங்கி கொள்ளுப்பிட்டி, நுகேகொடை, பாணந்துறை, கறுவாக்காடு, வெள்ளவத்தை கிளைகளிலும் தலைமை அகத்திலும் 6 தன்னியக்கப் பொறிகளை நிறுவியது.

## வங்கி மேற்பார்வை

நாட்டில் உள்ள அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களையும் தொடர்ந்து மேற்பார்வை செய்யும் பொறுப்பும் காலத்துக்குக்காலம் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் பொறுப்பும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தைச் சேர்ந்ததாகும். வங்கி மேற்பார்வையின் அடிப்படை நோக்கம் என்னவெனில் வங்கித் தொழில் முறையில் பொதுமக்களின் நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதுமாகும்.

தலப் பரீட்சிப்புக்கள் மூலமும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களின்

மூலமும் திணைக்களம் இத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது. தலத்திலேயேயான பரீட்சிப்புக்கள் தொடர்பாக 1994 இல் திணைக்களம் 12 வர்த்தக வங்கிகளினதும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியொன்றினதும் பரீட்சிப்புக்களை ஆரம்பித்துள்ளது. இவற்றுள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் 5 வர்த்தக வங்கிகளினதும் பரீட்சிப்புக்கள் ஆய்விற்குரிய ஆண்டில் நிறைவு பெற்றன. 1993 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆறு வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களும் 1994 இல் முற்றுப் பெற்றன. மேலதிகமாக அவற்றின் தொழிற்பாட்டின் சில குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக 4 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தலத்திலேயான பரீட்சிப்பின் முன்னோடியாக உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

வர்ததக வங்கிகளின் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு தொடர்பாக திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றுக்களின் அடிப்படையில் திணைக்களம் வர்த்தக வங்கிகளினதும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் நிதி நிலைமையினை தொடர்ந்து மேற்கொண்டது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளை கண்காணித்தலும் மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் மற்றும் முழுமையாகவே வங்கித்தொழிலினதும் இலாபத்தன்மையும் நிதி உறுதிப்பாடும் வங்கிகளினால் வழங்கப்படும் ஆண்டுவருவாய்ச் செலவுக் கூற்றுக்களின் அடிப்படையில் கணனிமயப்படுத்தப்பட்டு மதிப்பிடப்பட்டது.

1994 ஒற்றோபரில் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பின் பயனுறும் தன்மையினையும் வழுவின்மையையும் மேம்படுத்தும் நோக்கில் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை கணனி மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் தொடக்கி வைத்தது. இது தொடர்பாக வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்களை அறிவிக்கும் புதிய வடிவமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மதியூகமான நடவடிக்கைகளுக்காக வேண்டி வங்கித்தொழில் சட்டத்தின் கீழும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஏனைய வழிகாட்டல்களின் கீழும் தேவைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு வழிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் திணைக்களம் தொடர்ந்தும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றியது. ஆகக்குறைந்த மட்ட திரவச் சொத்துக்களையும், மூலதனத்யையும் பேணல், தனிப்பட்ட கடன்பாட்டாளர் தொடர்பான மட்டுப்படுத்தலுக்கு இசைவாக நடத்தல், பணிப்பாளர்களுக்கும் அவர்களது நலவுறுத்தல்களுக்கும் வசதிகள் வழங்குவதில் மட்டுப்படுத்தல்கள், செயற்பாடற்ற முற்பணங்களின்மீது தொங்கற் கணக்கில் வட்டியினை ஒதுக்கி அறிவிடமுடியா கடன்களுக்குப் போதுமான ஒதுக்கல்களை மேற்கொண்டு நியதிச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு குறிப்பிட்ட கணக்கியல் முறைகளில் ஆண்டு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன.

1987 இலிருந்து தொழிற்பட்டுவந்த வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. செலுத்தப்பட

வேண்டிய கட்டுப்பணம் ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ. 100/- இற்கு 3.75 சதம் ஆகும். இலங்கையின் நிதித்துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதை அவசியமாக்கிய வங்கித் தொழில் சட்டத்துக்கான பல திருத்தங்களை உருவாக்குவதிலும் திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டது. வங்கித் தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் தேவையான சட்டம் நிறைவேற்றப்படுவதனை எதிர்பார்த்து வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இத்திருத்தங்கள் இலங்கையில் உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளினதும் நடவடிக்கை மட்டத்தினை ஒருசீராக்கல், இதுவரை கண்காணிக்கப்படாது வந்த வர்த்தக வங்கிகளின் கடல் கடந்த வங்கித்தொழில் போன்ற முறைப்படுத்தப்படா நிதிச் செயல்பாடுகளை மத்திய வங்கியின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவருதல், மற்றும் மத்திய வங்கியின் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை உறுதிப்படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன. தற்போது பிரயோகிக்கப்படும் மதியூக நடவடிக்கைகளை வங்கித்தொழில் சட்டத்தில் உட்படுத்தப்படாத அபிவிருத்தி நிதி நிறுவனங்கள், சேமிப்பு வங்கிகள் என்பனவற்றின் தொழிற்பாட்டிற்கும் பிரேயாகிப்பதற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் வழிவகுக்கும்.

## வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள்

வங்கி அதனுடன் பதிவு செய்துகொண்ட நிதிக் கூட்டு நிலையங்களின் கண்காணிப்பினையும் மேற்பார்வையினையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இவ்வாண்டில் நிதிக் கூட்டு நிலையங்களின் தலப் பரீட்சிப்புக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கிய வேளையில் நேர காலத்துடன் எச்சரிக்கின்ற முறையின் மூலமாகத் தலத்திற்கு வெளியேயான கவனக் கண்காணிப்பினையும் தொடர்ந்து மேற்கொண்டது.

மத்திய வங்கியுடன் பதிவுசெய்துகொண்ட 24 நிதிக் கூட்டு நிலையங்களின் திரட்டிய ஐந்தொகை 31.03.94 இல் முடிவடைந்த நிதியாண்டில் வைப்புப் பொறுப்புக்களில் 18.5 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. இக்கூட்டு நிலையங்களின் கடன் பெறுகைகள் 4.4 சதவீதத்தினால் அதிகரித்தன. அறவிட முடியாக் கடன்களுக்கும் ஐயக் கடன்களுக்குமான ஒதுக்குகள் முன்னைய ஆண்டின் 106 சதவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து நிதியாண்டில் 171 சதவீதத்தினால் அதிகரித்தன. அறவிட முடியா மற்றும் ஐயத்திற்கிடமான கடன்களின் ஒதுக்குகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு 1991 இல் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரை எண் 2 (அறவிட முடியா மற்றும் ஐயத்திற்கிடமான ஒதுக்கு) முக்கிய காரணமாகும். சொத்துக்கள் பக்கத்தில், நிதியாண்டில் மொத்தத் திரவச் சொத்துக்கள் 14.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், 31.03.93 இல் மொத்தச் சொத்துக்களில் 64 சதவீதமாக விளங்கிய முற்பணங்கள் 18.8 சதவீதத்தால் அதிகரித்தன. மேலதிக விபரங்கள் அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளன.

1988 இன் 78 ஆம் இலக்க நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 24 நிதிக் கூட்டு நிலையங்களுக்கு பதிவு வழங்கப்பட்டது. நாணயச் சபையின் பணிப்புரைகளைத் தொடர்ந்து மீறிவந்தமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட ரான்ஸ் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்டின் பதிவு புறக்கீடு செய்யப்பட்டது. 1989 இல்

## அட்டவணை 2.6

### தொழிற்படும் நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகை

(ரூ. 000)

| | 31.03.93 இல் உள்ளவாறு | 31.03.94 இல் உள்ளவாறு | முன்னைய ஆண்டிற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | |
| 1. மூலதன நிதியங்கள் | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ... | 170,012 | 270,819 | |
| மூலதன ஒதுக்கு ... | 455,065 | 571,541 | |
| பொது ஒதுக்கு ... | 246,525 | 335,542 | |
| ஒதுக்கு நிதியம் ... | 175,368 | 204,293 | |
| ஏனைய ஒதுக்குகள் ... | 45,930 | 213,812 | |
| இலாப நட்டக் கணக்கு ... | 17,625 | 41,994 | |
| மொத்த மூலதன நிதியங்கள் ... | 1,110,525 | 1,638,001 | |
| கழிக்க : பிற்போடப்பட்ட செலவுகள் ... | 107 | 124 | |
| தேறிய மூலதன நிதியங்கள் ... | 1,110,418 | 1,637,877 | + 47.50 |
| 2. அறிவிடமுடியாக் கடனுக்கான ஒதுக்கு ... | 258,903 | 702,791 | + 171.45 |
| 3. பொதுமக்களின் வைப்புக்கள் ... | 4,986,693 | 5,907,935 | + 18.47 |
| 4. கடன்பாடுகள் | | | |
| வங்கிகள் ... | 718,553 | 610,530 | |
| ஏனையவை ... | 29,724 | 170,899 | |
| மொத்தக் கடன்பாடுகள் ... | 748,277 | 781,429 | - 4.43 |
| 5. ஏனைய பொறுப்புக்கள் ... | 951,104 | 1,150,360 | + 20.95 |
| 6. முழு மொத்தம் ... | 8,055,395 | 10,180,392 | + 26.38 |
| **சொத்துக்கள்** | | | |
| 1. திரவச் சொத்துக்கள் | | | |
| காசும் வங்கிகளிலிருந்து வரவேண்டியவையும் ... | 168,216 | 167,097 | |
| நிலையான வைப்புக்கள் ... | 325,207 | 290,061 | |
| திறைசேரி உண்டியல்கள் ... | 501,915 | 682,848 | |
| மொத்த திரவச் சொத்துக்கள் ... | 995,338 | 1,140,006 | + 14.53 |
| 2. முதலீடுகள் | | | |
| துணை மற்றும் கூட்டிலுள்ள பங்குகள் ... | 119,347 | 188,043 | |
| ஏனைய கம்பனிகளிலுள்ள பங்குகள் ... | 428,298 | 802,539 | |
| தொடர்புடைய கம்பனிகளிலுள்ள பங்குகள் ... | 500 | 500 | |
| தொகுதிக் கடன்கள் ... | – | 200 | |
| மொத்த முதலீடுகள் ... | 548,146 | 991,282 | + 80.84 |
| 3. முற்பணங்கள் | | | |
| கடன்கள் ... | 577,968 | 604,318 | |
| வாடகைக் கொள்வனவுகள் ... | 1,991,550 | 2,349,637 | |
| குத்தகை ... | 472,892 | 2,098,211 | |
| குத்தகை நிதி ... | 1,633,504 | 524,644 | |
| உண்மைச் சொத்துக்கள் ... | 200,614 | 263,523 | |
| ஏனைய முற்பணங்கள் ... | 275,738 | 279,952 | |
| மொத்த முற்பணங்கள் ... | 5,152,266 | 6,120,290 | + 18.79 |
| 4. துணை மற்றும் கூட்டிலிருந்து வரவேண்டியது ... | 9,538 | 1,844 | - 80.66 |
| 5. நிலையான சொத்துக்கள் | | | |
| இறையில் காணியும் கட்டடங்களும் ... | 591,429 | 777,723 | |
| தளபாடங்கள், பொருத்துக்கள், இணைப்புக்கள், ஏனைய கருவிகள் | 92,246 | 101,652 | |
| உந்து ஊர்திகள் ... | 68,912 | 66,222 | |
| பொறிகள் ... | 33,993 | 12,460 | |
| ஏனையவை ... | 11,419 | 1,808 | |
| மொத்த நிலையான சொத்துக்கள் ... | 797,999 | 1,019,871 | + 27.80 |
| 6. ஏனைய சொத்துக்கள் ... | 552,109 | 907,099 | + 64.30 |
| 7. முழு மொத்தம் ... | 8,055,395 | 10,180,392 | + 26.38 |
| அறியத்தந்த கூட்டு நிலையங்கள் ... | 24 | 24 | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தொழிற்பாட்டுக்கு வந்த தவறிய நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கான நிவாரணத் திட்டம் இவ்வாண்டில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் இடருக்குள்ளான 7 நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் ரூ. 377 இலட்சமாக விளங்கியது. 1994 இறுதிவரை வைப்பாளருக்குச் செலுத்தப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ. 5,115 இலட்சமாகும். இந்த நிவாரணக் கொடுப்பனவுகள் பெருமளவில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் மூலம் நிதியிடப்பட்டன. 1992 பெப்புருவரியில் நிர்வாகமும், முகாமைத்துவமும் மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட நிதிக் கம்பனியொன்றுக்கு வைப்புப் பொறுப்புக்களை எதிர்கொள்ளும்பொருட்டு ரூ. 2,200 இலட்சம் கொண்ட கடனொன்று வழங்கப்பட்டது. 1994 திசெம்பர் இறுதியில் இக்கம்பனிக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கிக் கடன்களின் வெளிநின்ற தொகை ரூ. 13,157 இலட்சமாக விளங்கியது.

திணைக்களம் 1988 இன் 78 ஆம் இலக்க நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்திற்கு பல திருத்தங்களை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தது.

## அபிவிருத்தி நிதி

1994 இல் அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் சருவதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மையின் வீடமைப்பு உத்தரவாத, குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV இன் கீழான குறைந்த வருமான வீடமைப்புக்கான மீள் நிதியிடல் திட்டத்திற்கு மேலதிகமாக சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான கடன் உத்தரவாதம், பேருந்துக் கொள்வனவுக் கடன், தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் போன்ற கடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்து தொழிற்படுத்தியது. நடுத்தரகால, நீண்டகால கொடுகடன் திட்டத்தின் நிருவாகமானது (நிதிக்கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் நீங்கலாக) நடுத்தரகால, நீண்டகால கொடுகடன் வசதிகள் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் நடவடிக்கைகளின் பின் தொடர் கவனிப்புக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களான அதாவது சிறு அளவு கைத்தொழில்கள் திட்டம், சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் திட்டம் I, II, III, IV மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டம் என்பனவற்றின் கீழான கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பு 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே அட்டவணை 2.7 இலும் 2.9 இலும் தரப்பட்டுள்ளது. சி. ந. கை. திட்டம் II, III, IV திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் வகைகளின் படியான பகுப்பினை அட்டவணை 2.8 காட்டுகின்றது.

### சிறிய அளவுக் கைத்தொழில்கள் திட்டம்

1978 இல் தொடங்கப்பட்ட சி.அ.கை. திட்டம் 1979 இன் சி.ந.கை. திட்டம்

| திட்டங்களும் ஆண்டுகளும் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சிஅகை) | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - I | |
|---|---|---|---|---|
| | 1994 | | 1994 | |
| விடயம் | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.20 | 1,670 | 286.10 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.40 (ஆ) | 1,670 | 157.50 (இ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் ... | 598 | 23.06 | 1,230 | 183.93 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் ... | 90 | 4.89 | 113 | 31.38 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் ... | 88 | 4.32 (எ) | 338 | 75.89 (எ) |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் ... | | 2.42 | | 33.89 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | |
| 3.3.1 முழுமையாகத் தீர்க்கப்பட்டவை ... | 63 | 1.68 | 230 | 19.07 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை ... | 1 | 0.00 (ஏ) | 27 | 2.11 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் .. | 7 | 0.22 | 30 | 5.50 |
| 3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஓ) ... | 16 | 0.24 | 37 | 2.03 |
| 3.3.5 பிற்போடப்பட்ட கோரல்கள் (ஓ) ... | 1 | 0.27 | 11 | 2.64 |
| 3.3.6 முடிவுறாக் கோரல்கள் (ஓ) ... | | | 3 | 0.51 |
| 3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் (ஓ) ... | | | | |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் ... | 8 | 0.42 (ஐ) | 40 | 4.56 (ஐ) |
| 4.2 (இதில் நிலுவையில் உள்ளவை) ... | 8 | 0.42 | 40 | 4.56 |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு ... | 8 | 0.30 (ஆ) | 40 | 2.92 (இ) |
| 5. கட்டணச் சேகரிப்புக்கள் ... | | 1.00 | | 12.22 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் ... | | 0.61 | | 8.39 |

(அ) தேசிய அபிவிருத்தி வங்கியால் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் IV ற்கு மாற்றப்பட்ட கடன்கள் நீங்கலாக.

(ஆ) வெளிநிற்கும் கடன்களில் 75 சதவீதம்.

(இ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- வரையறைக்குட்பட்டு, வெளி நின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இற்கும், ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இற்கும் உட்பட்டு, வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(உ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 இற்கு உட்பட்டு ரூ. 2,000,000, வரை, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

# உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

31 இல் உள்ளவாறு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

*சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை)*

| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - III | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - IV | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1993 | | 1994 | | 1993 | | 1994 | | 1993 | | 1994 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 2,531 | 1,392.54 | 2,531 | 1,392.54 | 3,130 | 1,955.59 (அ) | 3,130 | 1,955.59 (அ) | 4,899 | 3,477.03 | 6,270 | 4,735.90 |
| 2,531 | 713.63 (ஈ) | 2,531 | 713.63 (ஈ) | 3,130 | 1,312..62 (உ) | 3,130 | 1,312.62 (உ) | 4,899 | 2,102.03 (ஊ) | 6,270 | 2,855.77 (ஊ) |
| 1,368 | 575.58 | 1,497 | 677.84 | 505 | 183.85 | 1,000 | 439.89 | 19 | 13.74 | 253 | 125.52 |
| 340 | 167.37 | 341 | 167.90 | 252 | 202.09 | 267 | 202.09 | 52 | 32.69 | 169 | 103.76 |
| 216 | 87.21 (எ) | 225 | 115.51 (எ) | 90 | 61.55 (எ) | 124 | 61.55 (எ) | 13 | 6.50 (எ) | 40 | 25.54 (எ) |
| | 55.76 | | 58.63 | | 43.80 | | 43.80 | | 6.39 | | 20.42 |
| 117 | 29.44 | 124 | 30.33 | 50 | 15.39 | 69 | 19.90 | 5 | 1.08 | 16 | 3.64 |
| 4 | 0.67 | 4 | 0.67 | | | | | | | | |
| 40 | 9.41 | 44 | 11.67 | 16 | 5.49 | 24 | 7.43 | 1 | 0.16 | 3 | 0.43 |
| 5 | 1.10 | 5 | 1.10 | | | | | | | | |
| 24 | 7.51 | 26 | 8.17 | 5 | 2.57 | 4 | 4.63 | 1 | 1.11 | 2 | 1.64 |
| 19 | 2.99 | 15 | 4.80 | 19 | 8.44 | 25 | 10.83 | 6 | 4.06 | 18 | 12.86 |
| 7 | 3.62 | 7 | 3.62 | | | 2 | 1.70 | | | 1 | 1.63 |
| 662 | 203.51 (ஐ) | 520 | 146.31 (ஐ) | 2,307 | 872.88 (ஐ) | 1,770 | 585.85 (ஐ) | 4,822 | 1,801.26 (ஐ) | 5,829 | 2,999.54 (ஐ) |
| 427 | 55.72 | 394 | 68.17 | 748 | 80.89 | 567 | 108.00 | | | 509 | 51.47 |
| 662 | 117.05 (ஈ) | 520 | 84.31 (ஈ) | 2,307 | 577.04 (உ) | 1,770 | 386.81 (உ) | 4,822 | 1,220.18 (ஊ) | 5,829 | 1,951.68 (ஊ) |
| | 28.38 | | 29.21 | | 34.68 | | 39.59 | | 17.93 | | 61.78 |
| | 11.86 | | 13.99 | | 3.25 | | 5.64 | | 0.09 | | 0.26 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஊ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 16 இலட்சம் என்பதற்குட்பட்டு ரூ. 5 இலட்சம் வரை, ரூ. 5 இலட்சம் –ரூ. 10 இலட்சம், ரூ. 10 இலட்சம் – ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம் – ரூ. 80 இலட்சம் என்பனவற்றிற்கு முறையே 90%, 80%, 70%, 60%.

(எ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஏ) ரூ. 4,504.75 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) மீட்கப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக.

(ஒ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஓ) 4.1. இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*1 இன் மூலம் அகற்றப்பட்டது. சி.அ.கை. திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல் 1981 இல் முற்றுப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 767 மொத்தக் கடன்களில் ரூ. 4.2 இலட்சம் பெறுமதி கொண்ட 8 கடன்கள் மாத்திரம் மத்திய வங்கிக்கான ரூ. 3 இலட்சம் கொண்ட மொத்த உத்தரவாதக் கடன்பாடுகளுடன் 1994 இறுதியில் இன்னமும் தொழிற்பாட்டிலிருந்தன. இத்திட்டத்தின் கீழான கோரல்கள் திறைசேரியினால் செலுத்தப்படவுள்ளதுடன் இது ஏற்கெனவே ரூ. 17 இலட்சத்தினைச் செலுத்தியுள்ளது. வெளிநின்ற அனைத்து 8 கடன்கள் தொடர்பான கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன் இவை திறைசேரியினால் வழங்கப்படும் ரூ. 3 இலட்சம் கொண்ட மேலதிக கொடுப்பனவுடன் தொடர்புபட்டவையாக இருக்கும்.*

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் – 1 (சிநகை 1) திட்டம்

*சி. ந. கைத்தொழில் திட்டம் I 1979 இல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின்கீழ் 1979 – 1982 காலப்பகுதியில் ரூ. 2,860 இலட்சம் பெறுமதி கொண்ட 1,670 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. 1994 வரை மொத்தமாக 1,230 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக 1994 இறுதியில் ரூ. 314 இலட்சம் தொகை கொண்ட 113 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. ரூ. 339 இலட்சம் மொத்தப் பொறுப்பினைக் கொண்ட 338 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 191 இலட்சம் பெறுமதி கொண்ட 230 கோரல்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டன. எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளுக்கிணங்க நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலமைந்துள்ள செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்டுச் செலுத்தத்தவறிய அல்லது தோல்வி கண்டவையென பிரகடனம் செய்யப்பட்ட 27 கடன்கள் மீதான 50 சதவீதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 21 இலட்சம் கொண்ட தொகை இடைக்காலத் தீர்ப்பனவாகச் செலுத்தப்பட்டது. கடன்பெறுநர்களினால் உரிமக் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 37 கோரல்கள் தொடர்பாக ரூ. 20 இலட்சங்கொண்ட தொகை மீளச் செலுத்தப்பட்டவேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 55 இலட்சம் மொத்தப் பெறுமதி கொண்ட 30 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக அல்லது கடன்பெறுநர்கள் தமது உரிமக் கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் அத்தகைய கடன்களை மீளச்செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கியமை காரணமாக ரூ. 26 இலட்சம் தொகை கொண்ட 11 கோரல்களைச் சீர்தூக்கிப்பார்த்தல் பின்போடப்பட்டது. 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 29 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 46 இலட்சம் பெறுமதியான 40 கடன்கள் மாத்திரம் தொழிற்பாட்டிலிருந்ததாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணமும் மத்திய வங்கியினால் பெறப்பட்ட உரிமைக் கோரல்களுக்குப் பிந்திய மீளப்பெறுகைகளும் முறையே ரூ. 122 இலட்சமாகவும் ரூ. 84 இலட்சமாகவும் விளங்கின. கட்டுப்பண உட்பாய்ச்சல் மற்றும் உரிமைக் கோரலுக்குப் பிந்திய மீளப்பெறுகைகளின் மூலம் உருவான கிடைக்கத்தக்க மூலவளங்கள் ரூ. 206 இலட்சமாக அமைந்து இத்திட்டத்தின் கீழான பொறுப்புக்களை ஈடுசெய்யப்*

போதுமானதாக இருக்காமையினால் ரூ. 6 இலட்சம் கொண்ட தொகை மத்திய வங்கியினால் ஈடுசெய்யப்பட வேண்டியிருந்தது.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - II (சி.ந.கை. II) திட்டம்

சி. ந. கை. II திட்டம் 1982 இல் நடைமுறைக்கு வந்ததுடன் இத்திட்டத்தின் கீழான உத்தரவாதங்கள் 1989 வரை வழங்கப்பட்டன. 1982 இலிருந்து 1989 வரையான காலப்பகுதியில் ரூ. 7,140 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 13,930 இலட்சங்கொண்ட கடன்கள் மீது 2,531 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் ரூ. 6,780 இலட்சம் தொகை கொண்ட 1,497 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 1,680 இலட்சம் பெறுமதி கொண்ட 341 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1994 இறுதியில் ரூ. 590 இலட்சம் பொறுப்பைக் கொண்ட 225 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 300 இலட்சம் தொகை கொண்ட 124 கோரல்கள் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணங்களின் 4 உரிமைக் கோரல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி ரூ. 7 இலட்சங்கொண்ட மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தினை விஞ்சாத இடைக்கால கொடுப்பனவு செய்யப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 120 இலட்சம் தொகை கொண்ட 44 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. மத்திய வங்கிக்கு உரிமைக் கோரல்களை சமர்ப்பித்தபின் கடன்பெறுநர்களால் 5 உரிமைக் கோரல்களுடன் தொடர்பான கடன்கள் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ. 36 இலட்சம் தொகை கொண்ட 7 கோரல்களைப் புறக்கீடு செய்தன. 1994 இன் இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் பேரில் அல்லது கடன்பெறுநர்கள் உரிமைக் கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கியமையால் ரூ. 82 இலட்சம் தொகை கொண்ட 26 உரிமைக் கோரல்களை சீர்தூக்கிப் பார்ப்பது பிற்போடப்பட்டது. 1994 இறுதியில் ரூ. 840 இலட்சம் கொண்ட மொத்த மத்திய வங்கி உத்தரவாதப் பொறுப்பினையுடைய ரூ. 1,470 இலட்சங்கொண்ட 520 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் ரூ. 682 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 394 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1994 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 292 இலட்சமாக அமைந்த வேளையில், மத்திய வங்கியினால் உரிமைக் கோரல்களுக்குப் பின்னர் பெறப்பட்ட மீளப் பெறுகைகள் ரூ. 140 இலட்சமாக விளங்கி மூலவளங்களின் மொத்த உட்பாய்ச்சலை ரூ. 432 இலட்சமாக்கியது.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - III (சிநகை - III) திட்டம்

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் III திட்டம் 1988 இல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 19,560 இலட்சம் பெறுமதியான 3,130

## அட்டவணை 2.8

### சிநகை - II, சிநகை - III, சிநகை - IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

(பெறுமதி '000 ரூபாய்களில்)

| | கைத்தொழில் | சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III, IV 1982 - 1994 | | | | | | சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV 1994 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | % | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | % |
| 1. | உணவு பதனிடல் | 2,822 | 23.7 | 1,810,284 | 22.4 | 1,051,372 | 21.5 | 234 | 17.1 | 152,746 | 12.2 | 94,396 | 12.6 |
| 2. | ஏனைய வேளாண்மைக் கைத்தொழில் | 271 | 2.3 | 128,917 | 1.6 | 82,064 | 1.7 | 13 | 0.9 | 17,710 | 1.4 | 9,819 | 1.3 |
| 3. | இறப்பர் உற்பத்திகள் | 241 | 2.0 | 243,393 | 3.0 | 135,113 | 2.8 | 19 | 1.4 | 21,949 | 1.8 | 12,155 | 1.6 |
| 4. | உலோக உற்பத்திகள் | 1,028 | 8.6 | 531,579 | 6.6 | 324,953 | 6.7 | 139 | 10.1 | 93,638 | 7.5 | 54,149 | 7.2 |
| 5. | கட்டடவாக்கப் பொருட்கள் | 739 | 6.2 | 421,588 | 5.2 | 279,615 | 5.7 | 58 | 4.2 | 57,101 | 4.6 | 31,711 | 4.2 |
| 6. | கட்டடவாக்க ஒப்பந்தம் | 164 | 1.4 | 236,021 | 2.9 | 115,449 | 2.4 | 22 | 1.6 | 31,800 | 2.5 | 18,230 | 2.4 |
| 7. | மர உற்பத்திகள் | 722 | 6.1 | 329,467 | 4.1 | 225,481 | 4.6 | 79 | 5.8 | 53,907 | 4.3 | 35,538 | 4.7 |
| 8. | ஆடைகள் | 760 | 6.4 | 659,272 | 8.2 | 369,200 | 7.6 | 52 | 3.8 | 62,790 | 5.0 | 32,231 | 4.3 |
| 9. | புடவைகள் | 273 | 2.3 | 277,597 | 3.4 | 149,014 | 3.1 | 39 | 2.8 | 35,085 | 2.8 | 20,829 | 2.8 |
| 10. | தொழிற் கூடத்திருத்தல் | 441 | 3.7 | 229,480 | 2.8 | 151,445 | 3.1 | 42 | 3.1 | 47,026 | 3.8 | 24,988 | 3.3 |
| 11. | ஏனையவை | 4,470 | 37.5 | 3,216,573 | 39.8 | 1,998,242 | 40.9 | 674 | 49.2 | 677,686 | 54.2 | 415,893 | 55.5 |
| | மொத்தம் | 11,931 | 100.0 | 8,084,171 | 100.0 | 4,881,948 | 100.0 | 1,371 | 100.0 | 1,251,438 | 100.0 | 749,940 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கடன்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. 1991 இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி ஆரம்பத்தில் சிநகை III இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட 754 கடன்கள் சிநகை IV திட்டத்திற்கு மாற்றப்பட்டன.

சி.ந.கை. III இன் கீழான 3,130 கடன்களில் ரூ. 4,399 இலட்சம் பெறுமதியான 1,000 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 2,021 இலட்சங்கொண்ட 267 கடன்களுடன் தொடர்பான உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமை காரணமாக புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1994 இறுதியில் ரூ. 438 இலட்சம் மத்திய வங்கி உத்தரவாத பொறுப்பினைக் கொண்ட 124 கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் ரூ. 199 இலட்சம் கொண்ட 69 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் ரூ. 74 இலட்சம் தொகை கொண்ட 24 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. இத்தகைய கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் கடன் பெறுநர்கள் சம்பந்தப்பட்ட கடன் கணக்குகளை ஒழுங்கு முறைப்படுத்தியதன் காரணமாக 4 உரிமைக் கோரல்களைச் சீர்தூக்கிப் பார்த்தல் பிற்போடப்பட்டது. 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 3,868 இலட்சம் ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 5,858 இலட்சம் பெறுமதி கொண்ட 1,770 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இதில் ரூ. 1,080 இலட்சம் உள்ளார்ந்த பொறுப்பினைக் கொண்ட 567 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1994 திசெம்பர் 31 இல் உள்ளபடி இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 396 இலட்சமாக விளங்கியவேளையில் உரிமைக் கோரல்களுக்குப் பிந்திய மீளப் பெறுகைகளாக மத்திய வங்கியினால் ரூ. 56 இலட்சம் மீளப் பெறப்பட்டது.

## சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் - IV (சிநகை IV) திட்டம்

சிநகை திட்டம் IV 1992 மாச்சில் தொடங்கப்பட்டு தற்பொழுது தொழிற்பட்டு வருகின்றது. 1994 இறுதியில் ரூ. 47,360 இலட்சம் தொகைகொண்ட 6,270 கடன்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. இக்கடன்கள் தொடர்பான மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 28,560 இலட்சமாகும். இவ்வாண்டில் ரூ. 1,255 இலட்சம் தொகை கொண்ட 253 கடன்கள் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் 169 உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமை காரணமாக ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1994 இறுதியில் ரூ. 29,990 இலட்சம் பெறுமதி கொண்ட 5,829 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இக்கடன்கள் மீது வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் ரூ. 19,520 இலட்சமாக விளங்கின. 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 255 இலட்சம் தொகை கொண்ட 40 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 35 இலட்சம் தொகை கொண்ட 16 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. 1994 இறுதியில் உத்தரவாதக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 618 இலட்சமாக விளங்கியது. ஆண்டின் இறுதியில் பிந்திய மீளப் பெறுகைகளாக ரூ. 3 இலட்சங்கொண்ட தொகை பெறப்பட்டது.

## பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டம் (பே கொ க திட்டம்)

பொதுமக்களின் போக்குவரத்திற்காக பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளருக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கியினால் இத்திட்டம் 1990 நவம்பரில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 10,990 இலட்சம் கொண்ட 1,932 கடன்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது.

### அட்டவணை 2.9

### பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு

(பெறுமதி ப. இ. ரூபாய்களில்)

| விடயம் | 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் ... | 1,932 | 1,098.58 | 1,932 | 1,098.58 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 1,932 | 871.18(அ) | 1,932 | 871.18(அ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் ... | 51 | 27.75 | 251 | 140.81 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் ... | 114 | 66.45 | 116 | 68.47 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் ... | 6 | 3.71(ஆ) | 13 | 7.59 |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்பு ... | - | 2.33 | | 6.33 |
| 3.3 கோரல்களின் தீர்ப்பனவு ... | | | | |
| 3.3.1 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை ... | 3 | 0.69(இ) | 6 | 1.44 |
| 3.3.2 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் ... | 1 | 0.60 | 2 | 1.00 |
| 3.3.3 பின்போடப்பட்ட கோரல்கள் (உ) ... | | | | |
| 3.3.4 முடிவுறாக் கோரல்கள் (உ) ... | 2 | 0.81 | 4 | 2.53 |
| 3.3.5 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஊ) ... | | | 1 | 0.42 |
| 4.1 வெளிநின்ற கடன்கள் ... | 1,763 | 725.71(ஈ) | 1,557 | 420.53(ஈ) |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு ... | 1,763 | 574.60(அ) | 1,557 | 333.19(அ) |
| 5. சேகரிக்கப்பட்ட கட்டணம் ... | | 12.61 | | 19.22 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீளளிப்புகள் ... | | | | 0.52 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சத்திற்கு உட்பட்டு ரூ. 20 இலட்சம் வரை, ரூ. 20 இலட்சம்- ரூ. 30 இலட்சம், ரூ. 30 இலட்சம்- ரூ. 40 இலட்சம் என்பனவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) ஒன்று சேர்ந்த வட்டி உட்பட செலுத்தத் தவறிய தொகை.

(இ) முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3.9 இலட்சம் கொண்ட இரண்டு விடயங்கள் இப்பொழுது பகுதியளவு செலுத்தப்பட்டது எனவகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீட்கப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

(உ) 4.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவாதங்களின்மீது மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 8,710 இலட்சமாக விளங்கியது. 1992 இறுதியளவில் மீள் நிதியிடலுக்காக தேசிய அபிவிருத்தி வங்கிக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக 1992 இறுதியில் இத்திட்டத்தின் தொழிற்பாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின்கீழ், 1,816 கடன் பெறுநர்களினால் 1,911 புதிய பேருந்துகள் பொதுமக்களின் போக்குவரத்துத் தொகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டமையானது இத்திட்டத்தினைப் பயன்படுத்திக்கொண்ட தனியொரு பேருந்து சொந்தக்காரரின் உயர்ந்த விகிதத்தினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

1994 இறுதியில் ரூ. 1,408 இலட்சம் பெறுமதி கொண்ட 251 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 685 இலட்சங்கொண்ட 116 உத்தரவாதங்கள் ஒன்றில் காலாவதியாகின அல்லது மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப. கொ. நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமையினால் புறக்கீடு செய்யப்பட்டன.

1994 இறுதியில் ரூ. 76 இலட்சம் பெறுமதியான மொத்தம் 13 கோரல்கள் பெறப்பட்டன. இதில் மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 63 இலட்சமாகும். இவற்றில் 6 கோரல்கள் 50 சதவீத இடைக்காலத் தீர்ப்பனவிற்குத் தகுதி பெற்றிருந்தமையினால் அவற்றிற்கு மொத்தமாக ரூ. 14 இலட்சம் செலுத்தப்பட்டது. 1994 இறுதியில் ரூ. 25 இலட்சம் பெறுமதி கொண்ட 4 கோரல்கள் வெளிநின்றன. ரூ. 10 இலட்சம் கொண்ட 2 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன.

1994 இறுதிவரை இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப் பணம் ரூ. 192 இலட்சமாக அமைந்த வேளையில் ரூ. 5 இலட்சங்கொண்ட தொகை கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகளாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அட்டவணை 2.9 இத்திட்டத்தின் செயலாற்றத்தினைத் தொகுத்துத் தருகின்றது.

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் (வீஉகுவபு நிதி)· கட்டம் IV

1992 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் (வீஉகுவபு நிதி) கட்டம் IV இன் கீழான மீள் நிதியிடல் திட்டம் 1994 இலும் தொடர்ந்து தொழிற்பட்டது. மத்திய வங்கி இத்திட்டத்தின்கீழ் உச்சக் கடன் வழங்குநராகத் தொழிற்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் அரச வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் – கட்டம் IV இன் கீழ் இலங்கை அரசிற்குக் கடனாக வழங்கப்பட்ட நிதியங்களிலிருந்து மீள்நிதியிடல் வசதிகள் மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்றன. வீஉகுவபுநி திட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்ட துணை உச்சக் கடன் வழங்குனர்கள் (துஉகவ)/நேரடி முதன்மைக் கடன் வழங்குனர்கள் (நேமுகவ) எனக் குறித்துரைக்கப்பட்ட பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு இந் நிதியங்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. தற்போது இத்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி, மக்கள்

வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட செலான்வங்கி, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் குருநாகல், கண்டி, கேகாலை, புத்தளம், காலி, பதுளை ஆகிய இடங்களில் உள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன துணை முதன்மை கடன் வழங்குனர்களாகப் பங்குபற்றுகின்றன. 1994 திசெம்பரில் கம்பகா, மாத்தளை, மாத்தறை ஆகியவற்றிலுள்ள ஏனைய மூன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது இலங்கை வங்கியினூடாக இத்திட்டத்தில் பங்கேற்கிறது. வீடமைப்புக்காக காணியைக் கொள்வனவு செய்தல் ஏற்கனவேயுள்ள வீடுகளைப் பெருப்பித்தல்/ முன்னேற்றல், புதுப்பித்தல் என்பன உட்பட சொந்தமாகக் குடியிருப்பதற்காக வீடமைத்தல் தொடர்பான எந்த நோக்கத்திற்காகவும் இத்திட்டத்தின்கீழ் கடன்வழங்கப்படுகின்றது. ரூ. 4,600 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர் இத்திட்டத்தின்கீழ் கடன்பெற உரித்துடையவர்களாவர். எனினும் மாதாந்தம் ரூ. 5,700/- சராசரி வருமானத்திற்கும் மேல்நோக்கித் திருத்துவதுபற்றிப் பரிசீலிக்கப்படுகின்றது.

வீஉகுவபுறி திட்டம் 1994 வரை திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூ. 1,500 இலட்சங்கொண்ட முற்பணத்தின் அடிப்படையில் தொழிற்பட்டது. வீடமைப்பு உத்தரவாத உடன்படிக்கையின் கீழ் ஐ. அ. டொலர் 250 இலட்சங்கொண்ட கடனின் முதலாவது தொகுதியான ஐ. அ. டொலர் 100 இலட்சம் 1994 ஒத்தோபரில் கடனாகப்பெறப்பட்டது. இக்கடனிலிருந்து பெறப்பட்ட தொகை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீள் நிதியிடலின் பகிர்ந்தளிப்பிற்காக பயன்படுத்தப்பட்டது.

அட்டவணை 2.10

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புகளும்**

(ரூபா '000)

| | துணை உச்சக் கடன் வழங்குநர் | ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | | பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | |
|---|---|---|---|---|---|
| | | 1994 | 1992-1994 | 1994 | 1992-1994 |
| 1. | இலங்கை வங்கி ... | 134,811 | 309,562 | 89,106 | 188,564 |
| 2. | வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ... | 510 | 1,357 | 687 | 903 |
| 3. | வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி ... | 585 | 5,284 | 887 | 3,806 |
| 4. | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ... | 62,627 | 72,977 | 21,248 | 24,649 |
| 5. | மக்கள் வங்கி ... | 90,086 | 134,877 | 87,762 | 110,662 |
| 6. | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ... | 19,094 | 24,436 | 12,634 | 14,835 |
| 7. | வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ... | 2,735 | 4,335 | 1,440 | 2,355 |
| 8. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி ... | 18,843 | 31,606 | 10,137 | 14,630 |
| | மொத்தம் ... | 338,291 | 584,434 | 223,901 | 360,404 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.11

## வீஉகுவபுநி திட்டம் கட்டம் - IV இன் செயலாற்றத்தினது தொகுப்பு நோக்கம், முதிர்ச்சி, அளவின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்

(ரூ. '000)

| வகை | | | ஒப்புதல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1994 | | | 1992 - 1994 | | |
| | | | நகரம் | கிராமம் | மொத்தம் | நகரம் | கிராமம் | மொத்தம் |
| 1. கட்டடவாக்கம் | | ... | 23,850 | 124,845 | 148,695 | 48,608 | 242,434 | 291,042 |
| 2. முன்னேற்றங்கள் | | ... | 25,142 | 82,441 | 107,583 | 40,650 | 145,283 | 185,933 |
| 3. நிலக் கொள்வனவு | | ... | 20,089 | 60,781 | 80,870 | 24,782 | 80,842 | 105,624 |
| 4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | ... | 200 | 944 | 1,144 | 310 | 1,526 | 1,836 |
| மொத்தம் | | ... | 69,281 | 269,010 | 338,291 | 114,349 | 470,085 | 584,434 |
| முதிர்ச்சியின்படி கடன்கள் | | | | | | | | |
| 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | | ... | 25,660 | 120,491 | 146,151 | 36,690 | 180,987 | 217,677 |
| 6 - 10 ஆண்டுகள் | | ... | 18,349 | 76,744 | 95,093 | 35,853 | 176,112 | 211,964 |
| 11- 15 ஆண்டுகள் | | ... | 25,181 | 71,166 | 96,347 | 41,507 | 111,927 | 153,434 |
| 16 - 20ஆண்டுகள் | | | 90 | 610 | 700 | 299 | 1,059 | 1,358 |
| கடன்களின் அளவு | ரூபா | | | | | | | |
| 0 | 2,500 | ... | 21 | 2,079 | 2,100 | 120 | 9,188 | 9,308 |
| 2,501 | 5,000 | ... | 1,522 | 9,775 | 11,297 | 2,872 | 29,786 | 32,658 |
| 5,001 | 7,500 | ... | 2,004 | 22,005 | 24,009 | 4,660 | 53,190 | 57,850 |
| 7,501 | 10,000 | ... | 5,772 | 50,629 | 56,401 | 11,541 | 135,580 | 147,121 |
| 10,001 | 15,000 | ... | 15,653 | 36,221 | 51,874 | 41,239 | 41,267 | 82,505 |
| 15,001 | 20,000 | ... | 6,780 | 17,570 | 24,350 | 8,345 | 25,431 | 33,776 |
| 20,001 | 25,000 | ... | 10,457 | 21,258 | 31,715 | 11,724 | 30,043 | 41,768 |
| 25,001 | 30,000 | ... | 1,704 | 7,905 | 9,610 | 2,239 | 12,037 | 14,277 |
| 30,001 | 35,000 | ... | 1,473 | 6,815 | 5,291 | 1,951 | 9,030 | 10,981 |
| 35,001 | 40,000 | ... | 2,385 | 6,571 | 10,956 | 2,926 | 12,490 | 15,416 |
| 40,001 | 45,000 | ... | 1,952 | 4,951 | 6,903 | 2,391 | 7,261 | 9,652 |
| 45,001 | 50,000 | ... | 5,509 | 33,271 | 38,780 | 7,049 | 44,580 | 51,628 |
| 50,001 | 100,000 | ... | 14,049 | 47,831 | 61,881 | 17,292 | 60,077 | 77,369 |
| 100,000> | | ... | 0 | 125 | 125 | 0 | 125 | 125 |
| மொத்தம் | | ... | 69,281 | 269,010 | 338,291 | 114,349 | 470,085 | 584,434 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் – கட்டம் IV மாகாணங்களின்படி கடன் ஒப்புதல்கள்

| மாகாணம் | | 1994 | | 1992 - 1994 | |
|---|---|---|---|---|---|
| | | தொகை (ரூ. '000) | சதவீதம் | தொகை (ரூ. '000) | சதவீதம் |
| 1. | மத்திய ... | 48,656 | 14.4 | 80,475 | 13.8 |
| 2. | கிழக்கு ... | 8,084 | 2.4 | 16,105 | 2.8 |
| 3. | வடமத்திய ... | 56,737 | 16.8 | 143,350 | 24.5 |
| 4. | வடமேற்கு ... | 29,180 | 8.6 | 48,150 | 8.2 |
| 5. | வடக்கு ... | 2,887 | 0.9 | 3,831 | 0.7 |
| 6. | சப்பிரகமுவா ... | 27,461 | 8.1 | 45,382 | 7.8 |
| 7. | தெற்கு ... | 45,593 | 13.5 | 66,203 | 11.3 |
| 8. | ஊவா ... | 7,221 | 2.1 | 16,623 | 2.8 |
| 9. | மேல் ... | 112,471 | 33.2 | 164,315 | 28.1 |
| மொத்தம் | ... | 338,291 | 100.0 | 584,434 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வீஉகுவபுநி திட்டம் IV இன் செயலாற்றம் பற்றிய புள்ளி விபரத் தொகுப்பு அட்டவணைகள் 2.10, 2.11, 2.12, 2.13 இல் தரப்பட்டுள்ளது.

1994 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 3,380 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டு ரூ. 2,240 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1992 முதல் 1994 வரை ஒன்று சேர்ந்த எண் தொகைகள் ரூ. 5,840 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டு ரூ. 3,600 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், மிக உயர்ந்த அளவிலான கடன் பெறுநர்கள் கிராமியத் துறையைச் சார்ந்தவர்களாவர். எனவே 1993 இலும் 1994 இலும் ஒப்புதலளிக்கப்பட்ட வற்றில் 80 சதவீதம் கிராமியத் துறையின் வீடமைப்பிற்கானதாகவிருந்தது. பால் அடிப்படையில் கடன் பெறுநர்களின் பகுப்பு 1994 இன் கிராமியத்துறையில் 30 சதவீதமான கடன் பெறுநர்களும் நகரத்துறையில் 31 சதவீதமானோரும் பெண்களெனக் காட்டியது. 1994 இல் கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பின்படி 1994 இல் பெறப்பட்ட கடன்களில் 44 சதவீதம் புதிய வீடுகளை அமைப்பதற்கும், 32 சதவீதமானவை திருத்தம் அல்லது பெருப்பித்தலுக்கும், 24 சதவீதம் காணிக் கொள்வனவிற்காகவும் பெறப்பட்டன. காணிக் கொள்வனவிற்காகப் பெறப்பட்ட கடன்களின் பங்கு 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளின் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 24 சதவீதமாக அமைந்து பெருமளவு அதிகரிப்பைக் காட்டியது.

1994 இல் இத்திட்டத்தின் கீழான கடன்களில் காற் பங்கிற்குக் கூடுதலானவை ரூ. 10,000 அல்லது அதற்குக் குறைவான தொகைகளுக்கானவையாக இருந்த

வேளையில் 30 சதவீதத்திற்குக் கூடுதலானவை ரூ. 10,000 இற்கும் ரூ. 25,000 இற்கும் இடைப்பட்ட தொகைகளுக்கானவையாகவிருந்தன. மேலும் 30 சதவீதமான கடன் கள் ரூ. 45,000 தொடக்கம் ரூ. 100,000 வரையிலான தொகைகளுக்கானவையாக காணப்பட்டன. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, பிகிஅ வங்கிகள் என்பனவற்றால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் விகிதாசாரம் முன்னைய ஆண்டினைவிடக் கணிசமான அளவு கூடுதலாக விளங்கிய வேளையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் பங்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் ரூ. 25,000 இற்குக் குறைவான சிறிய கடன்களை வழங்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் 40 சதவீதத்திற்கு இன்னும் வகைகூறி மிகக்குறைவான வருமானம் பெறும் வகுப்பினருக்கு இத்திட்டம் மிகவும் பக்கச் சார்பாக அமைந்துள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. 1994 இல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றத்தின் முக்கிய பண்பாக அமைந்ததுயாதெனில் இத்திட்டத்தில் நிதியியல் நிறுவனங்களின் மிகவும் சம அளவிலான பங்கேற்பாகும்.

இத்திட்டத்தின் கீழான கடன்களின் முதிர்ச்சித்தன்மை, 35 சதவீதமான கடன்கள் 5 வருடங்கள் வரைக்குமான கடன்களாகவும் மேலும் 35 சதவீதமானவை 5 தொடக்கம் 10 வருட காலப் பகுதிக்கானவையாகவும் 25 சதவீதமானவை 10 முதல் 15 வருட காலப்பகுதிக்கானவையாகவும் அமைந்தமையை எடுத்துக்காட்டுகின்றது.

## சிநகை மற்றும் பே கொ க உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு

1988 யூலையில் ஆரம்பித்த முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் சிறிய நடுத்தர கைத்தொழில் மற்றும் பெருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு 1994 இலும் தொடர்ந்தது. 1994 இறுதியில் முதலீடுகளும் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணமும் ரூ. 5,610 இலட்சமாகவும் 1994 இல் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ரூ. 880 இலட்சமாகவும் விளங்கியது.

## தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (தொஅநி)

பல்வேறு மாவட்டங்களிலும் நடாத்தப்படும் சிறப்பு முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தற்போதுள்ள சிறிய கைத்தொழிலாளர்களின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தேர்ச்சியினைத் தரமுயர்த்துவதே தொஅநி இன் குறிக்கோளாகும். முலாம்பூச்சு, இரும்பு உற்பத்திகளின் தயாரிப்பு, உணவு பதனிடல் போன்ற கைத்தொழில் துணைத் தொகுதிகளின் நன்மைக்காக கிராமிய மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்நோக்கத்திற்குத் தேவையான நிதிகளுக்கு 1993 இன் பிற்பகுதியில் உலக வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டது. களுத்துறை மாவட்டத்திலுள்ள பொதுப்பிட்டியவில் தும்பு, நார், என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள 40 சுய தொழில் புரிவோருக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் முகாமைத்துவத்தினையும் தேர்ச்சியினையும் தரமுயர்த்துவதை உள்ளடக்கியிருந்ததுடன் ஏற்றுமதிச் சந்தைக் கேள்வியை ஈடு செய்வதன் மீது முக்கிய கவனம் செலுத்தியது. 1995 இல் ஆறு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

1994 இல் சிறிய நடுத்தர கைத்தொழில் செயற்றிட்டங்களின் ஆற்றல் மற்றும் தொழிற்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு அவை தொடர்ந்தும் பரிசோதிக்கப்பட்டன. தேவையானவிடத்து சரியான நடவடிக்கைகளை விதந்துரைக்கும் பொருட்டும் பகொ நிறுவனங்களினால் ஒப்படைக்கப்பட்ட கோரல்களை தீர்ப்பனவு செய்வதற்குமாக மொத்தம் 131 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன. செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, புத்தளம், கம்பகா, அநுராதபுரம், இரத்தினபுரி, நுவெரலியா மாவட்டங்களில் அமைந்திருந்தன.

## கிராமியக் கொடுகடன்

வேளாண்மை மற்றும் கிராமியத் துறையினை முன்னேற்றுவதற்காக வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட பின்வரும் கொடுகடன் திட்டங்களின் கொடுகடன் நிறைவேற்று முகவராக 1994 இல் வங்கி தொடர்ந்தும் செயற்பட்டது.

1. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட கேகாலை மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

2. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

3. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மத்திய நில நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம்

5. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவரினாலும் நிதியிடப்பட்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

7. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம்.

### கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

1987 ஒற்றோபர் 15 இல் அதன் தொழிற்பாட்டைத் தொடங்கிய கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிடடம் சிஎஉ 15.5 இலட்சம் கொண்ட கொடுகடன் கூறினைக் கொண்டிருந்ததுடன் 1994 திசெம்பர் 31

இல் முடிவடையுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இது பின்னர் 1995 இறுதிவரை நீடிக்கப்பட்டது. 1994 இறுதியில் செயற்றிட்டத்தின் அனைத்து வகைகளின் கீழும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை மொத்த ஒதுக்கீடான ரூ. 900 இலட்சத்திற்கு (சிஎஉ 15.5 இலட்சம்) எதிராக ரூ. 750 இலட்சமாக விளங்கியது. கடன்கள் குறுங்காலப் பயிர்ச் செய்கைக்கும் நடுத்தரகால வேளாண்மை மற்றும் கைத்தொழில் நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்டன. 1994 இல் இச்செயற்றிட்டத்தின்கீழ் ரூ. 112 இலட்சங்கொண்ட தொகை வாழைப்பயிர்ச் செய்கை, பண்ணை அபிவிருத்தி, சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்கள் என்பனவற்றுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் கீழ் நன்மை பெற்றோரின் மொத்த எண்ணிக்கை 499 ஆகும்.

## சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான நிதி உதவியுடன் 1989 இல் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின் கீழ் நிதியிடப்பட்ட நடவடிக்கைகள் கள அபிவிருத்தி, நாற்று அபிவிருத்தி, தொழிற்சாலைப் புத்தாக்கம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. 1994 இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 472 இலட்சமாகும். இதில் கள அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட கடன்கள் (மீள் நடுகையும் புதிய நடுகையும்) ரூ. 247 இலட்சமாக அமைந்தன. நாற்று அபிவிருத்திக்காகவும், தொழிற்சாலைப் புத்தாக்கத்திற்காகவும் வழங்கப்பட்ட தொகை முறையே ரூ. 78 இலட்சமாகவும் ரூ. 147 இலட்சமாகவும் அமைந்தன. 1994 இல் வங்கியினால் எல்லா வகைகளுக்கும் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் ரூ. 290 இலட்சமாகும். 1993 இல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட கொடுகடன் புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டம் 1994 இல் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் கருத்தரங்குகளையும் கொடுகடன் முகாம்களையும் நடாத்தியதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் கள அபிவிருத்திக் கடன்களுக்குப் பொருந்துவதான ஆகக்குறைந்த சலுகைக் காலத்தினை விதந்துரைத்தல், கள அபிவிருத்திக்காக உதவு தொகையால் மேவப்படாத செயற்றிட்டச் செலவின் பங்கினை உள்ளடக்கும் வகையில் கடன் தெகையினை மேல் நோக்கி உயர்த்துதல் போன்ற பல மீளாய்வுகள் இக்கொடுகடன் திட்டத்தில் செய்யப்பட்டன.

## மத்திய நில நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆறாவது ஆண்டாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட கடன் திட்டமானது சிறப்பாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள், உணவுப் பயிர்கள் போன்ற நீண்ட காலப்பயிர்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் வர்த்தக மயமாக்கலை மேம்படுத்துவதற்குமான நோக்கில் வேளாண்மையாளருக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டதொன்றாகும். 1993 இன் நடுப்பகுதியில் இச்செயற்றிட்டம் மீள வடிவமைக்கப்பட்டபின்னர் 1994 இல் கடனுக்கான கேள்வி துரிதமடைந்தது. வேளாண்மையாளருக்குப் பெருமளவில் கடன்வழங்கலை மேற்கொள்ளும்பொருட்டு இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கண்டி, காலி, மாத்தறை,

இரத்தினபுரி ஆகிய இடங்களிலுள்ள பிகிஅ வங்கிகள் என்பனவும் புதிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் கீழான கடன் வசதிகள் பண்ணையின் பயிர் அபிவிருத்தி, தனியார்நாற்றுமேடை அபிவிருத்தி, பண்ணையில் அறுவடையின் பின்னான கையாளல் மற்றும் நீண்டகாலப் பயிர்களின் பதனிடல் நடவடிக்கைகள் என்பனவற்றுக்கு வழங்கப்படுகின்றன. 1994 இறுதியில் மத்திய வங்கியினால் கூட்டு மொத்தமாக ரூ. 750 இலட்சங்கொண்ட தொகை மீள் நிதியிடலாக வழங்கப்பட்டிருந்தது. இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 400 இலட்சமாகும்.

## வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்

வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் முதன்மை நோக்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மற்றும் புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய ஐந்து எல்லை மாவட்டங்களிலும் உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆட்களையும் உடைமைகளையும் புத்தாக்கம் செய்வதற்கான செயற்றிட்டங்களுக்கு வேண்டிய மூலதனத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்கு கடன் வசதிகளை வழங்குவதாகும். இச்செயற்றிட்டமானது வேளாண்மை, கால்நடை கடற்றொழில் மற்றும் வேளாண்மை வியாபாரத்துறை போன்றவற்றுக்குப் புத்துயிரூட்டுவதன் மூலம் பண்ணை உற்பத்திகளை நிறைவு செய்து ஊக்கமளிப்பதுடன் தொழில்வாய்ப்பு மற்றும் வருவாய் உருவாக்கத்தினை விரிவுபடுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்துவதற்காக 1991 இல் வங்கியில் நிறுவப்பட்ட செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு 1994 இறுதியில் அவர்களால் வழங்கப்பட்ட 2,597 கடன்கள் தொடர்பாக மொத்தமாக ரூ. 1,460 இலட்சங்கொண்ட மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியிருந்தது. 1994 இறுதியில் 13,163 கடன்கள் தொடர்பாக மொத்தமாக ரூ. 6,460 இலட்சங்கொண்ட மொத்தத் தொகை அவர்களால் வழங்கப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளிலும் கடனுக்கு ஏற்பட்ட உறுதியான கேள்வியின் விளைவாக ஒன்று சேர்ந்த பகிர்ந்தளிப்பு மொத்தக்கடன் ஒதுக்கில் 94 சதவீதமாக அமைந்தது. கடன்களை மீளப்பெறுதல் இவ்வாண்டில் ஆரம்பித்ததுடன் மீளப் பெறுகைகளிலிருந்து கிடைத்தவற்றை முதலாவது சுற்றுக் கடன்களின்போது நிதி உதவி வழங்கப்படாத விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் கடனாக வழங்கும்படி செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்குப் பணித்தது.

## சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் திட்டம் (சிவேநிகொ திட்டம்)

சிவேநிகொடுகடன் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தும் முகவராக வங்கி தொடர்ந்தும் செயற்பட்டது. இச்செயற்றிட்டத்திற்காக வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் சிஎஉ 48 இலட்சங்கொண்ட கடனையும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (கபஅஅ) 47 இலட்சம் கொண்ட கொடையையும் வழங்கின. செயற்றிட்டம் காலி, மாத்தறை, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் தொழிற்படுகின்றது. கண்டி, புத்தளம், மாவட்டங்களின் தொழிற்பாடுகள் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வேளையில் காலி, மாத்தறை, மாவட்டங்களின் தொழிற்பாடுகள் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்படுகின்றது. இச்செயற்றிட்டம்

## அட்டவணை 2.13

### வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம்
### துறைவகைப்படி/பால்வகைப்படி கடன் ஒப்புதல்கள்

(பெறுமதி ரூபாய்களில்)

| ஆண்டு | மொத்தம் | | கிராமியத்துறை | | | | நகரத்துறை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | | பெண்கள் | | ஆண்கள் | | பெண்கள் | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| 1992 | 4,273 | 27,380,550 | 2,977 | 19,204,900 | 1,244 | 7,445,050 | 39 | 523,000 | 13 | 207,600 |
| 1993 | 23,718 | 218,762,075 | 13,865 | 123,027,075 | 6,193 | 51,397,300 | 2,321 | 28,841,000 | 1,339 | 15,496,700 |
| 1994 | 22,733 | 338,290,991 | 13,317 | 195,544,106 | 5,669 | 73,466,359 | 2,600 | 50,223,135 | 1,147 | 19,057,391 |
| மொத்தம் | 50,724 | 584,433,616 | 30,159 | 337,776,081 | 13,106 | 132,308,709 | 4,960 | 79,587,135 | 2,499 | 34,761,691 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1990 இல் அறிமுகம் செய்யப்பட்டு 1994 இல் 5 ஆவது ஆண்டாக அதன் தொழிற்பாட்டைத் தொடர்ந்ததுடன் மத்திய வங்கி இதனை நடைமுறைப்படுத்தும் முதன்மை முகவராகத் தொழிற்படுகின்றது.

1994 திசெம்பர் இறுதியில் கண்டி, புத்தளம் மாவட்டங்களில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 17,540 ஆகவும் அதன் தொகை ரூ. 1,410 இலட்சமாகவும் விளங்கிய வேளையில் காலி, மாத்தறை மாவட்டங்களில் ரூ. 565 இலட்சங்கொண்ட 7,256 கடன்கள் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தன. வேஅபநி மற்றும் கபஅஅ மாவட்டங்களில் முறையே 85 சதவீத, 91 சதவீதமான திருப்திகரமான வீதத்திலமைந்த கடன் மீட்புகள் காணப்பட்டன.

## தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள் செயற்றிட்டப் பிரதேசத்தில் வருவாய் உருவாக்கம் மற்றும் தொழில்வாய்ப்பு உருவாக்க வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தென்மாகாணத்திலுள்ள மக்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதாகும். இந்நோக்கத்திற்காக தென்மாகாணத்தில் கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு மக்களுக்கு நிதியியல் வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன.

செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை செயற்படுத்தும் முகவராக வங்கி தொழிற்படுகின்றது. இது சிஎஉ 64 இலட்சங்கொண்ட (ஏறத்தாழ ரூ. 4,500 இலட்சம்) மொத்தக் கொடுகடன் ஒதுக்கினைக் கொண்டுள்ளது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டையிலுள்ள மூன்று பிகிஅ வங்கிகளும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டத்தின்கீழ் வெலிகமவில் உள்ள சாளி மவுண்ட் கைத்தொழில் பேட்டையில் உள்ள சிறு/நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கும் தென்மாகாணத்தில் உள்ள ஏனைய சிறு/நடுத்தர அளவுக் கிராமிய தொழில் முயற்சிகளுக்கும் வங்கியினால் மீள்நிதியிடல் வழங்கப்படுகின்றது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களும் இவ்வாண்டில் இக்கொடுகடன் திட்டங்களில் இளைய பங்காளர்களாக அனுமதிக்கப்பட்டனர்.

பி.கி.அ. வங்கிகளுக்கு மீள் நிதியிடல் வழங்குதல் 1994 இல் ஆரம்பித்ததுடன் இது 2,129 கடன்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 315 இலட்சத்தினைக் கொண்டிருந்தது.

## வட - மேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம்

வட-மேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் திட்டம் 1994 இல் அதன் முதலாவது முழு ஆண்டுத் தொழிற்பாட்டை நிறைவு செய்தது. இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் வேளாண்மைக் கிணறுகளையும் ஏற்றல் நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிருமாணிப்பதற்காக வேளாண்மையாளருக்கும், சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்களுக்காகக் கிராமியப் பெண்களுக்கும் கடன்

வழங்குவதற்காக பங்கேற்கும் வங்கிகளுக்கு மீள் நிதியிடல் வழங்கப்படுகின்றது. இக்கொடுகடன் திட்டம் குருநாகல், புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள பி. கி. அ. வங்கிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி என்பனவற்றினால் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கொடுகடன் திட்டத்திற்காக ஆ. அ. வங்கியிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த நிதியம் சிஎஉ 16 இலட்சமாகும் (ஏறத்தாழ ரூ. 900 இலட்சம்). இலங்கை அரசின் உதவுதொகை வேளாண்மைக் கிணறுகளைக் கட்டுவதற்காக வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவுதொகையின் வடிவிலமைந்தது.

1994 இறுதியில் சுயதொழில் வாய்ப்பிற்காக 265 கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் பங்கேற்கும் வங்கிகளினால் ரூ. 51 இலட்சம் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

### தேயிலை வர்த்தகர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமான சிறப்பான நிதியிடல் வசதி

1994 இன் முதல் அரைப்பகுதியில் நிலவிய மிதமிஞ்சிய நிரம்பல் காரணமாகத் தேயிலை விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்து சென்றமையைக் கவனத்திற்கொண்டு ஒரு நிவாரண வழிமுறையாகத் தேயிலை வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு சிறப்பான நிதியியல் வசதியினை 1994 மேயில் அரசு அறிமுகப்படுத்தியது. இவ் வசதியின் கீழ் 1994 மே 16 இலிருந்து 10 தேயிலை ஏலங்களில் மேலதிகத் தேயிலையைக் கொள்வனவு செய்வதற்குத் தேயிலை வர்த்தகர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் ஆறுமாத காலத்திற்கு ஆண்டிற்கு 15 சதவீத வட்டியில் மொத்தமாக ரூ. 6,800 இலட்சத்தினைத் தமது சொந்த நிதியத்திலிருந்து கடனாக வழங்குமாறு வர்த்தக வங்கிகள் கேட்கப்பட்டன. இவ்வசதியின் கீழ் வழங்கப்பட்ட நிதியங்களுக்காக அரசு வர்த்தக வங்கிகளுக்கு ஆண்டிற்கு 3.5 சதவீத வட்டி உதவுதொகையைச் செலுத்துவதற்கு இணங்கியது. 1994 திசெம்பர் 31 இல் வர்த்தக வங்கிகளால் 18 தேயிலை வர்த்தகர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் மேலதிகத் தேயிலையைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 2,870 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை கடனாக வழங்கப்பட்டது. இது ரூ. 10 இலட்சம் கொண்ட வட்டி உதவுதொகைக் கொடுப்பனவை மேற்கொள்ளச் செய்தது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

### (பிகிஅ வங்கிகள்)

1994 இல் பிகிஅ வங்கிகள் அவற்றின் நடவடிக்கைகளைக் கணிசமாக விரிவுபடுத்தியதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் தமது முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.

### பிகிஅ வங்கிகளின் கிளை வலையமைப்பு

1994 இல் தொழிற்பாட்டிலிருந்த பிகிஅ வங்கிகளின் மொத்த எண்ணிக்கை

## அட்டவணை 2.14

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை வலையமைப்பு

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | பி.கி.அ.வ. நிறுவப்பட்ட திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | | | 1994 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | |
| 1. களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 4 | 3 | 4 | 1 | – | – | 1 | 2 | – | – | 15 |
| 2. மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 5 | 2 | – | 1 | – | – | – | 4 | – | – | 12 |
| 3. குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 6 | 4 | 2 | 1 | 1 | 1 | – | 2 | – | – | 17 |
| 4. அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 2 | 4 | 1 | – | – | – | 3 | 1 | – | – | 11 |
| 5. அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பாந்தோட்டை | | 2 | 2 | 2 | – | 1 | – | 1 | – | – | 8 |
| 6. கேகாலை | 87.02.08 | கேகாலை | | | 8 | 1 | 2 | 1 | (1) | 1 | 1 | 1 | 14 |
| 7. புத்தளம் | 87.07.11 | சிலாபம் | | | 5 | 1 | – | 2 | 1 | 1 | – | – | 10 |
| 8. காலி | 87.08.17 | எல்பிட்டிய | | | 1 | 7 | 1 | – | – | 3 | – | – | 12 |
| 9. கண்டி | 87.10.13 | கண்டி | | | 6 | 3 | – | 2 | – | 2 | – | – | 13 |
| 10. நுவரெலியா | 88.10.10 | நுவரெலியா | | | | 1 | 3 | 2 | – | 2 | – | – | 8 |
| 11. மொனராகலை | 88.10.11 | புத்தளை | | | | 1 | 2 | 1 | 2 | – | – | – | 6 |
| 12. பதுளை | 90.10.13 | பதுளை | | | | | | 4 | 2 | 3 | – | 4 | 13 |
| 13. பொலநறுவை | 91.05.17 | பொலநறுவை | | | | | | | 4 | 2 | 1 | – | 7 |
| 14. மாத்தளை | 91.06.21 | மாத்தளை | | | | | | | 5 | 1 | – | – | 6 |
| 15. இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | | | | | | | 4 | 2 | 1 | – | 7 |
| 16. அம்பாறை | 92.02.24 | அம்பாறை | | | | | | | | 5 | 2 | [illegible] | 7 |
| 17. கம்பகா | 93.06.07 | கம்பகா | | | | | | | | | 2 | [illegible] | 3 |
| மொத்தம் | | | 17 | 15 | 29 | 19 | 9 | 14 | 21 | 32 | 7 | 6 | 169 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

17 ஆக விளங்கியது. பதுளை, கேகாலை, கம்பகா, பிகிஅ வங்கிகள் 06 கிளைகளைத் திறந்ததன் மூலம் பிகிஅவ கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 169 இற்குக் கொண்டுவந்தன. பிகிஅ வங்கிகளின் கிளை வலையமைப்பின் விபரம் அட்டவணை 2.14 இல் தரப்பட்டுள்ளது.

### வைப்புத் திரட்டல்

நடைமுறையாண்டின் இறுதியில் பிகிஅ வங்கிகளினால் 833,858 கணக்குகள் தொடர்பாகத் திரட்டப்பட்ட வைப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 14,810 இலட்சமாக விளங்கியது. இது 1993 உடன் ஒப்பிடுகையில் வைப்புக்களின் பெறுமதியில் 34 சதவீதமும் கணக்குகளின் எண்ணிக்கையில் 17 சதவீதமும் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் சேமிப்பு வைப்புக்கள் ரூ. 12,540 இலட்சமாக அமைந்த வேளையில் நிலையான

வைப்புக்கள் ரூ. 2,280 இலட்சமாக விளங்கி 1993 இனைவிட முறையே 28 சதவீத, 90 சதவீத அதிகரிப்புகளைக் காட்டின. சேமிப்புக் கணக்குகளின் சராசரிப் பெறுமதி 1993 இன் ரூ. 1,157 இலிருந்து 1994 இல் ரூ. 1,381 இற்கு அதிகரித்தவேளையில் நிலையான வைப்புக்களின் சராசரிப் பெறுமதி 1993 இன் ரூ. 26,549 இலிருந்து 1994 இல் ரூ. 30,366 இற்கு உயர்வடைந்தது. கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்கள், கிளைகளின் விரிவாக்கம், வங்கித்தொழில் நடைபெறாத மற்றும் வங்கித்தொழில் குறைவாக நடைபெறும் பிரதேசங்களில் இடம்பெயர் வங்கித்தொழில் வசதிகளை வழங்கியமை, கிராமியப் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பன பிகிஅ வங்கிகளின் வைப்புத் திரட்டல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களிப்புச்செய்த முதன்மைக் காரணிகளாகும்.

**கடன் வழங்கல்**

பிகிஅ வங்கிகள் 1993 இல் 72,176 கடன்கள் தொடர்பாகப் பகிரிந்தளித்த ரூ. 9,660 இலட்சத்திற்கெதிராக 1994 இல் 88,187 கடன்கள் தொடர்பாக ரூ. 11,180 இலட்சத்தினைப் பகிர்ந்தளித்தன. கடன்களின் எண்ணிக்கை 16 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் கடன்களின் தொகை 22 சதவீதத்தால் அதிகரித்தது. கடன்களின் சராசரி அளவு 1993 இன் ரூ. 13,390 இலிருந்து 1994 இல் ரூ. 12,680 இற்கு வீழ்ச்சியடைந்தது.

1994 இல் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் வேளாண்மைத் துறை 34 சதவீதத்தைப் பெற்றது. வர்த்தகமும் வாணிபமும், சிறுகைத்தொழில்கள், ஏனைய வேறு துறைகள் என்பனவற்றுக்கு வழங்கப்பட்ட கடன்களின் அளவு முறையே 19 சதவீதமாகவும் 9 சதவீதமாகவும் 38 சதவீதமாகவும் விளங்கின. தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் பிணைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 1993 இன் ரூ. 1,720 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 3,950 இலட்சத்திற்கு கணிசமான விரிவினைப் பதிவு செய்தன.

**ஏனைய நடவடிக்கைகள்**

1994 இல் பிகிஅ வங்கிகள் சனசக்தித் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் கடன்களை வழங்கின. 1994 இறுதியில் பிகிஅ வங்கிகள் சனசக்தி நன்மை பெறுநருக்கு ரூ. 1,188 இலட்சங்கொண்ட 20,029 கடன்களை வழங்கின.

பிகிஅ வங்கிகள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் என்ற வகையில் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், நீண்டகாலப் பயிர்அபிவிருத்திச் செயற்றிட்டம், வேளாண்மைப்புத்தாக்கச் செயற்றிட்டம் பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரின் வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிடச் செயற்றிடம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், வட மேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன் செயற்றிட்டம், இசுறு செயற்றிட்டம் போன்ற பல சிறப்புக் கடன் திட்டங்களில் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டன. 1994 இல் இச்சிறப்புச் செயற்றிட்டங்களின்கீழ் எல்லா பிகிஅ வங்கிகளாலும் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் பெறுமதி ரூ. 2,230 இலட்சமாகும்.

இவற்றுடன் பிகிஅ வங்கிகள் அவற்றின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 'சனசமுவ' என்பனவற்றினூடாகக் கிராமியத் துறையினருக்கு வங்கித்தொழில் பழக்கங்கள் மற்றும் வாய்ப்புடைய செயற்றிட்டங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கித்தொழில் வசதிகள் என்பன பற்றிய அறிவைப் புகட்டுவதையும் தொடர்ந்து மேற்கொண்டன. பிகிஅ வங்கிகள் தமது வாடிக்கையாளருக்கு அவர்களது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும் களஞ்சியப்படுத்துவதிலும் உதவி வழங்குவதனையும் தொடர்ந்து மேற்கொண்டன.

## கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி

மத்திய வங்கியின் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1993 இல் 1,111 ஆட்களுக்கு நடாத்திய 51 பயிற்சி நெறிகளுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 1,074 பேருக்கு 50 பயிற்சி நெறிகளை நடாத்தியது.

1994 இல் நடாத்தப்பட்ட 50 பயிற்சி நெறிகளில் 46 நெறிகள் கல்லூரியிலும் எஞ்சியவை வெளி இடங்களிலும் நடாத்தப்பட்டன. வெளியிடங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றியோர் முக்கியமாக சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களாகவும் சுயதொழில் புரிவோராகவும் காணப்பட்டதுடன் இவர்கள் பெரும்பாலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் (பிகிஅவ) வழங்கப்படும் கடன் வசதிகளைப் பெறுவோராகவோ அல்லது பிகிஅ வங்கிகளால் கிடைக்கச் செய்யப்படும் நிறுவனரீதியான கடன்வசதிகளைப் பெறுவதற்கு எதிர்பார்த்திருப்பவர்களாகவோ காணப்பட்டனர். 1994 இல் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் மத்திய வங்கியிலிருந்து 442 பங்குபற்றுநரும் வர்த்தக வங்கிகளிலிருந்து 260 பேரும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்து 199 பேரும், ஏனைய நிறுவனங்களிலிருந்து 79 பேரும், சிறு தொழில் முயற்சியாளர்கள் சுயதொழில் இளைஞர் செயற்றிடங்களிலிருந்து 94 பேரும் உள்ளடங்கிய மொத்தம் 1,074 பேர் கலந்துகொண்டனர்.

1994 இல் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் பயிற்சிகள் வழங்கப்பட்ட முதன்மை விடயங்களாவன கிராமிய வங்கித் தொழில் செயற்றிட்டம் சார்ந்த அபிவிருத்தி, வர்த்தக வங்கித் தொழில், வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகள், முகாமைத்துவம், பயிற்றுநர்களுக்கான பயிற்சி, கணனிப் பயன்பாடு என்பனவாகும். 1994 இல் அட்டவணையிடப்பட்ட பயிற்சி, நெறிகளுக்கு மேலதிகமாக இவ்வாண்டில் முதலீட்டு வங்கித்தொழில், பங்குச் சந்தைத் தொழிற்பாடுகள், நிதியியல்துறை அபிவிருத்திகள் போன்ற பல சிறப்புப் பயிற்சி நெறிகளைக் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி நடாத்தியது.

ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மைக் கடன் நிறுவனத்தின் உறுப்பினர்கள் நிறுவனங்களின் நடுத்தர/மூத்த முகாமையாளர்களுக்கு "முகாமைத்துவ அபிவிருத்தி" என்ற முதலாவது சருவதேச பயிற்சி நெறியினை கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி நடாத்தியது. சருவதேச ஒதுக்குகளின் முகாமைத்துவம் மீதான சியசன் கருத்தரங்கினையும் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி நடாத்தியது.

சுய பயில்வு நிலையத்தின் ஆங்கில மொழி ஆய்வுகூடம் 1994 ஏப்பிறல் 28 ஆம் திகதி கல்லூரியில் தொடக்கிவைக்கப்பட்டதுடன் மத்திய வங்கியின் 358 ஊழியர்களுக்கு வசதிகளை வழங்கியது.

இலங்கை மத்திய வங்கியின் முன்னைய மூத்த துணை ஆளுநரும் வர்த்தகமும் அபிவிருத்தியும் தொடர்பான ஐக்கிய நாடுகள் பேரவையின் செயலாளர் நாயகமுமான முனைவர் காமினி கொரெயா அவர்களால் "அபிவிருத்தியில் உருவகத் தோற்றப்பாடு" என்ற தலைப்பிலான சொற்பொழிவுடன் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி அதனது 13 ஆவது ஆண்டு விழாவை நடாத்தியது.

## ஊழியர் சேமநிதியம்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, உதவுதொகைகள், தண்டப்பணங்கள், நிதியத்தின் பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் பொருத்தமான கணக்குளைப் பேணுதல், உறுப்பினரின் நன்மைகளை மீளளிப்புச் செய்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் வலுப்படுத்தல் ஆகிய விடயங்களில் ஈடுபட்டுள்ள தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உதவு தொகைகள்

1994 இல் நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகைகள் 1993 இன் ரூ. 66, 109 இலட்சத்திற்கு எதிராக ரூ. 74,057 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகை மட்டத்தினைவிட ரூ. 7,948 இலட்சம் அல்லது 12 சதவீத அதிகரிப்பினைக் குறித்துக்காட்டுகின்றது.

### உறுப்பினர் நிலுவைகள்

ஆய்வுக்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படுமுன்னர் 1994 திசெம்பர் 31 இல் உறுப்பினர் நிலுவைகள் ரூ. 757,312 இலட்சமாக விளங்கின. இது 1993 இறுதியினைவிட ரூ. 133,062 இலட்சம் அல்லது 21.3 சதவீத அதிகரிப்பாகும்.

### முதலீடுகள்

அரச பிணையங்கள், திறைசேரி உண்டியல்கள் வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச் சந்தை பெருந்தோட்டக் கம்பனி முறிகள், மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் நிதியம் 1993 இன் ரூ. 304,305 இலட்சத்திற்கு எதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 376,092 இலட்சத்தினை முதலீடு செய்தது. இது 1993 இன் முதலீடுகளின் மட்டத்தினைவிட ரூ. 71,787 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகும்.

1994 திசெம்பர் 31 இல் நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ. 810,534 இலட்சமாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட ரூ. 145,211 இலட்ச அதிகரிப்பாகும்.

## முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

1989 ஆம் ஆண்டின் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி ஊழியர் சேமநிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த வருமானவரி விலக்களிப்பு மீளப்பெறப்பட்டது. இதன்படி 1989 ஏப்பிரல் 1 ஆம் நாளுக்குப் பின்னர் பெறப்பட்ட முதலீடுகளிலிருந்தான அனைத்து வருவாய்களும் முதலீட்டு வருமானத்தின் 10 சதவீத தடுத்துவைக்கும் வரிக்கும் வருமான வரி மீதான 15 சதவீத தண்டப் பணத்துக்கும் உட்படுத்தப்பட்டன. 1994 ஆம் ஆண்டில் முதலீட்டு வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட மொத்தத் தடுத்துவைக்கும் வரி ரூ. 11,390 இலட்சமாகவும் வருமானவரி மீதான தண்டப்பணம் ரூ. 1,708 இலட்சமாகவும் விளங்கியது.

1994 இல் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் 1993 இன் ரூ. 91,596 இலட்சத்திற்கு எதிராக ரூ. 113,907 இலட்சமாக அமைந்து ரூ. 22,311 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

## மீளளிப்புகள்

1994 இல் உறுப்பினர்களுக்கு மீளளிப்பு நன்மைகளின் வடிவில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1993 இன் ரூ. 23,773 இலட்சத்திற்கு எதிராக ரூ. 26,301 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 2,528 இலட்சம் அல்லது 10.6 சதவீத அதிகரிப்பாகும். நன்மைகளின் மீளளிப்புக்கான உரிமைக் கோரல்கள் 1993 இல் செய்து தீர்க்கப்பட்ட 51,343 உரிமைக் கோரல்களுக்கு எதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் 49,986 ஆக விளங்கின.

## உறுப்பினர்களின் நிலுவைகள் மீதான வட்டி

நிதியத்தின் பணத்திலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது வட்டி செலுத்தும்படி ஊழியர் சேமநிதியம் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. 1994 இறுதியில் உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டிவீதம் ஆண்டொன்றுக்கு 12.75 சதவீதமாக இருந்தது. இது 1993 இன் வட்டி மட்டத்தினைவிட .75 சதவீதம் குறைவானதாகும்.

ஆண்டு இறுதியில் உறுப்பினர்களின் வரவிலுள்ள மொத்த நிலுவையின் மீதே வட்டி செலுத்தப்படுகின்றது. ஆண்டில் அவை பெறப்பட்ட அனைத்து உதவுதொகைகளும் அவை பெறப்பட்ட நாளைக் கருத்திற் கொள்ளாது ஆண்டு முழுவதற்குமான வட்டிக்கு தகைமைபெறுகின்றது. அதாவது திசெம்பரில் பெறப்பட்ட உதவுதொகைக்கும் சனவரியில் பெறப்பட்ட உதவுதொகைக்குச் செலுத்தப்படும் வட்டியைப் போன்றே வட்டி செலுத்தப்படுகின்றது. எனவே பயனுறும் வட்டி வீதமானது ஓரளவு உயர்வானதாகும்.

அட்டவணை 2.15

ஊழியர் சேமநிதியப் புள்ளிவிபரங்கள் 1993 – 1994

| | 1993 | 1994 |
|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ப.இ.ரூ.) ... | 6,610.0 | 7,405.7 |
| 2. முதலீடுகள் (அ) (ப.இ.ரூ.) ... | 30,430.5 | 37,609.2 |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் (ப.இ.ரூ.) | 9,159.6 | 11,390.7 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ப.இ.ரூ.) ... | 2,377.3 | 2,630.1 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 51,343 | 49,986 |
| 6. வட்டிவீதம் (சதவீதம்) ... | 13.5 | 12.75 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கள் (ப.இ.ரூ.) | 8,427.3 | 9,655.7 |
| 8. முதலீட்டு வருமானம் மீதான தடுத்துவைத்தல் வரி (ப.இ.ரூ.) | 922.4 | 1,139.0 |
| 9. வருமானவரி மீதான மிகைவரி (ப.இ.ரூ.) ... | 138.3 | 170.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சிப் பெறுகைகளையும் குறுங்கால, முதலாந்தர திறைசேரி உண்டியல்களிலும் அழைப்புப் பணச் சந்தையிலும் முதலீடுசெய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

### ஊசேநி வீடமைப்புக் கடன் திட்டம்

*வீடமைப்பு நோக்கங்களுக்காக சில கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து தமது நிலுவையில் உள்ள தொகையில் 75 சதவீதம் வரையிலான கடனைப் பெறுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஊழியர் சேமநிதியச் சட்டம் 1988 இன் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாவன வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, அரசஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவாகும்.*

*1994 திசெம்பர் 31 இல் சம்பந்தப்பட்ட தொழில் அலுவலகங்களுக்கு ஊழியர் சேமநிதியத் திணைக்களம் நிலுவைகளை உறுதிப்படுத்தும் 53,540 விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்தி அனுப்பிவைத்துள்ளது.*

*நிதியத்தின் 1993 ஆம் 1994 ஆம் ஆண்டு தொழிற்பாட்டின் ஒப்பிடத்தக்க தரவுகள் அட்டவணை 2.15 இல் தரப்பட்டுள்ளது.*

## செலாவணிக் கட்டுப்பாடு

*1994 மாச்சு 15 ஆம் நாள் இலங்கையினால் சருவதேச நாணய நிதிய உறுப்புரைகளின் ஒப்பந்தத்தின் உறுப்புரை VIII பிரிவு 2, 3 மற்றும் 4*

என்பனவற்றின் கடப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையினைத் தொடர்ந்து கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1994 மாச்சு 18 ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மூலம் அனைத்து நடைமுறைக் கணக்கு (மூலதனமல்லா) கொடுக்கல் வாங்கல்களுக்கும் கட்டுப்பாடின்றி வெளிநாட்டு நாணயத்தினை விடுவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## ஏற்றுமதிகள்

1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 22 (4) இன் நியதிகளுக்கிணங்க ஏற்றுமதியாளர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த உட்கொண்டுவரலுக்கான தேவைப்பாடுகள் அகற்றப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6 (2) (அ) வினால் தேவைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பெறுமதிகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டிய தேவைப்பாட்டிலிருந்தும் ஏற்றுமதியாளருக்கு விலக்களிக்கப்பட்டது. இதன்படி ஏற்றுமதியாளர்களுக்கு இப்பொழுது தமது ஏற்றுமதிப் பெறுமதிகளை இலங்கையில் ரூபாக் கணக்கில் அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைத்திருக்கக்கூடிய வகையில் உட்கொண்டுவரவோ அல்லது வெளிநாட்டு வர்த்தக வங்கியொன்றில் வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கவோ முடியும்.

பொருட்களின் ஏற்றுமதிக்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து ஏற்றுமதியாளர்கள் உரிமம்பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்ற தேவைப்பாடும் 1994 ஏப்பிறல் 7 ஆம் நாளிடப்பட்ட எண் 183/14 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மீளப்பெறப்பட்டது.

நடைமுறைக் கொடுப்பனவுகளுக்கு (மூலதனமல்லா) இப்பொழுது தடையின்றி பணவலுப்பல்களை மேற்கொள்ளலாம் என்ற நோக்கில் 1994 மாச்சு 8 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் மாற்றக்கூடிய ரூபாக் கணக்குகளில் காணப்பட்ட நிலுவைகளை ரூபா நடைமுறைக் கணக்குகள் எனப் பெயர்மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

1994 யூன் 16 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் கலங்கள்/கப்பல் ஆளணியினருக்கு தொழில் தருவோர் வெகுமதிக் கொடுப்பனவை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வர்த்தக வங்கிகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தாள்களைப் பெற்றுக்கொள்வதற்கு கப்பலுக்கு சரக்குகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இறக்குமதிகள்

1994 நவெம்பர் 18 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் நாணயக் கடிதங்களை நிறுவாமலேயே 90 நாட்களுக்கு ஆவணங்களுக்கெதிரான கொடுப்பனவு நியதிகளில் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 7,500 வரையான வர்த்தக தொகைகளில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## பொதுப் படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளுக்கு இணங்க அரசாங்கத்தின் சார்பில் வங்கி தொடர்ந்தும் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேற்கொண்டு வந்தது. முன்னைய ஆண்டுகளைப் போலவே இப்பணியானது பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட பிரதான கடன் கருவிகளாவன அரச பிணைகள் (ரூபாக் கடன்கள்), திறைசேரி உண்டியல்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பனவாகும். மேலதிகமாக, மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கலும் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அரசின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் முகாமைத்துவத்தினையும் படுகடன் பணிக்கொடுப்பனவினையும் பொதுப்படுகடன் திணைக்களம் கையாண்டது. அதனது உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் அதனது தரத்தினை மேம்படுத்துவதற்குமாக வேண்டி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் தரவுத்தளம் மேலும் விரிவாக்கப்பட்டது. பொதுப்படுகடன் முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகளை உருவாக்க உதவிசெய்யும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1994 இல், இக்கருவிகளுக்கான சந்தையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரச பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் தொடர்பான சட்டங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1994 இறுதியில் மொத்தமாக வெளிநின்ற அரசின் மொத்தப் படுகடன் ரூ. 5,627,163 இலட்சமாகும். இவ் எண்தொகை இலங்கை வங்கியினால் பணியாற்றப்பட்ட அரச உத்தரவாதப் பொதுப் பணிகள் கையேட்டுக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. இது 1993 இறுதியின் பெறுமதியினைவிட ரூ. 641,093 இலட்சம் கூடுதலானதாகும். 1994 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பொறுப்புக்கள் ரூ. 3,032,450 இலட்சமாக விளங்கி ரூ. 286,766 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இதில் ரூ. 181,254 இலட்சம் செலாவணி வீதத் தேய்வு காரணமாக ஏற்பட்டதாகும். அரசின் வெளிநின்ற மொத்தப் படுகடனில் வெளிநாட்டுப் படுகடன் 53.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மீதி 46.1 சதவீதமும் உள்நாட்டுப் படுகடனைப் பிரதிபலித்தது.

1994 இல் ரூ. 468,778 இலட்சம் கொண்ட அரசின் ரூபாக் கடன்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் ரூபாக் கடன்களினதும் வட்டிக் கொடுப்பனவுகளினதும் மொத்த மீள் கொடுப்பனவுகள் முறையே ரூ. 149,555 இலட்சமாகவும் ரூ. 166,788 இலட்சமாகவும் விளங்கின. 1994 இறுதியில் வெளிநின்ற ரூபாக் கடன்களின் (மொத்த) தொகை ரூ. 1,375,538 இலட்சமாகும். இது, இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் மீளமைப்பு தொடர்பாக 1993 இல் அரசினால் வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்ட கால முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. ஊழியர் சேம நிதியம் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக 1994 இல் தொடர்ந்தும் விளங்கியதுடன் 1994 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபாக் கடன்களில் 56.4 சதவீத்தினையும் கொண்டிருந்தது. இரண்டாவது பெரிய உதவுநரான தேசிய சேமிப்பு வங்கி 1994 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபாக் கடன்களில் 22.4 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

1992 திசெம்பர் 16இல் ரூ. 900,000 இலட்சத்திலிருந்து ரூ. 1,250,000 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை 1994 இல் மாற்றமின்றிக் காணப்பட்டது. 1992 யூலை 24இல் அறிமுகம் செய்யப்பட்ட முதலாந்தர வர்த்தகர் முறையானது திறைசேரி உண்டியல்களுக்கான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தையினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்யும் பொருட்டு 1994 இல் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்படி சான்றளிக்கப்பட்ட 18 முதன்மை வர்த்தகர்களில் 17 பேர் முதன்மை வர்த்தகர்களாக மீளப் பதவியிடப்பட்டனர். இத்துடன் டியூச் வங்கி, மஷ்றெக் வங்கி பிஎஸ்சி, ஹபிப் வங்கி ஏஜி சூறிச், வரையறுக்கப்பட்ட செலிங்கோ செக்கியூறிட்டியும் பைனான்சல் சேர்விசும், வரையறுக்கப்பட்ட வனிக் இன்கோப்பறேசன் ஆகிய ஐந்து புதிய முதன்மை வர்த்தகர்களும் இவ்வாண்டில் நியமிக்கப்பட்டனர். இதன்விளைவாக முதன்மை வர்த்தகர்களின் எண்ணிக்கை 18 இலிருந்து 22 ஆக அதிகரித்தது. இவ்வெண்தொகை பதினாறு வர்த்தக வங்கிகளையும் ஆறு வர்த்தகமல்லா வங்கி நிறுவனங்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதன்மை வர்த்தகர்களுக்கான பொறுப்புக்கள் பற்றிய கூற்று மற்றும் சிறப்புரிமைகள் 1994 நவெம்பர் 1 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கூற்றுடன் முதன்மை வர்த்தகர்களுக்கு அறிக்கைப்படிவம் ஒன்று வழங்கப்பட்டது. முதன்மை வர்த்தகர்களினால் அறிக்கைப் படிவங்களில் வழங்கப்பட்ட தகவல்களைக் கொண்டு தரவு அடிப்படை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிதியங்கள் போன்ற "செல்வாக்கிற்குட்பட்ட முதலீட்டாளர்களை" உள்ளடக்கியிருந்த போட்டித்தன்மையற்ற விலைக் கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அக்கோரல்கள் ஒவ்வொரு ஏலங்களிலும் நிறையேற்றப்பட்ட சராசரி வீதங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1994 யூலை 1 இலிருந்து திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிகள் மீதான தடுத்துவைத்தல் வரி நீக்கப்பட்டது.

திணைக்களம் 3, 6 மற்றும் 12 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்துடன் மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட குறுங்கால உண்டியல்களும் இரண்டாந்தரச் சந்தையின் விற்பனைக்காக இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டன. அதேவேளை பொதுப்படுகடன் திணைக்களம் சந்தைப் பங்கேற்பாளருடன் பணச் சந்தையின் நடைமுறை அபிவிருத்திகள் பற்றிச் சிறப்பாக அரச படுகடன் பிணைகள் சந்தை பற்றித் தொடர்ச்சியான கலந்துரையாடலைப் பேணும் நோக்குடன் முதன்மை வர்த்தகர்களுடன் வாராந்தக் கூட்டங்களை நடாத்தியது. திறைசேரி உண்டியல்களின் வாராந்த அடிப்படையில் வழங்கப்படவேண்டிய தொகை, மத்திய வங்கி ஒதுக்குகளின் முதிர்ச்சித்தன்மைபோன்ற திறைசேரி உண்டியல்களின் ஏலங்கள் தொடர்பான தீர்மானங்களை நாணய முகாமைத்துவ உத்தியின் ஒருபகுதியாக நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டது.

முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்டு மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் பெறுமதி 1993 இறுதியில் ரூ. 59,780 இலட்சம் அல்லது 6.2 சதவீதத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 89,791 இலட்சத்திற்கு அல்லது வெளிநின்ற மொத்தத் தொகையில் 9.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன்விளைவாக

மத்திய வங்கியல்லாத் துறையின் உடைமைகள் 1993 இல் வெளிநின்ற மொத்தத் தொகையில் ரூ. 912,177 இலட்சம் அல்லது 93.8 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகையில் ரூ. 899,166 இலட்சத்திற்கு அல்லது 90.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற மொத்தத் தொகை முந்திய ஆண்டு இறுதியின் ரூ. 971,957 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இறுதியில் ரூ. 988,957 இலட்சமாக விளங்கி ரூ. 17,000 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பு 1994 இல் ரூ. 55,000 இலட்சம் கொண்ட புதிய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டமையினதும் ரூ. 38,000 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமையினதும் விளைவாக ஏற்பட்டதாகும். இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் பேரில் செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூ. 179,152 இலட்சமாகும்.

ஆய்விற்குரிய ஆண்டில் 3, 6, 12 மாத திறைசேரி உண்டியல்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே ஆண்டுக்கு 11.58 – 18.73, 11.71 – 19.29, 12.20 – 19.43 சதவீதங்களுக்கிடையே வேறுபட்டுக் காணப்பட்டன. 1994 ஒற்றோபர் வரையும் வட்டிவீதத்தின் அமைப்பில் வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டது. இது 1994 நவெம்பர், திசெம்பர் மாதங்களில் மாற்றமடைந்தது.

1990 இல் ஆரம்பிக்கப்பட்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் வழங்கலை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் 6,12, 24 மாத முதிர்ச்சிக் காலத்தில் வழங்கப்பட்டதுடன் ஆண்டுக்கான வட்டி வீதங்களும் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் மாற்றமின்றி முறையே 17.15 சதவீதமாகவும், 18.06 சதவீதமாகவும், 19.83 சதவீதமாகவும் விளங்கின. தேசிய சேமிப்பு வங்கியினாலும் இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்தினாலும் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் முகப்புப் பெறுமதி முறையே ரூ. 719 இலட்சமாகவும், ரூ. 659 இலட்சமாகவும் விளங்கின. இவ்விரு மூலங்களும் தொடர்பான மீளக் கொடுப்பனவுகள் முறையே ரூ. 635 இலட்சமாகவும், ரூ. 430 இலட்சமாகவும் விளங்கின. இம் மீள் கொடுப்பனவுகள் ரூ. 170 இலட்சம் கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தன. 1994 இறுதியில் வெளிநின்ற திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் தொகை ரூ. 1,449 இலட்சமாகும்.

சந்தையின் மேலதிகத் திரவத்தினை ஈர்க்கும் நோக்குடன் 1993 ஒற்றோபர் 19 இல் ஆரம்பிக்கப்பட்ட மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கலை பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. 1994 ஆம் ஆண்டில் ரூ. 29,900 இலட்சமும் ரூ. 34,350 இலட்சமும் கொண்ட முறையே 3 மாத, 6 மாத மத்திய வங்கிப் பிணைகள் முதன்மை வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன. ஆண்டு முடிவில் வெளிநின்ற மத்திய வங்கிப் பிணைகள் ரூ. 37,400 இலட்சமாகும். 1993 திசெம்பர் இறுதியில் ஆண்டுக்கு 18 சதவீதமாக விளங்கிய மத்திய வங்கிப் பிணைகள் மீதான நறுக்கு வீதம் 1994 சனவரியில் 16 சதவீதத்திற்கும் 1994 பெப்புருவரி இறுதியில் 15 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது. 1994 மாச்சில் இவ்வீதம் ஆண்டிற்கு 13 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டு ஆண்டின் மிகுதிக் காலப்பகுதியில் மாற்றமின்றியிருந்தது. இவ் வழங்கல்களின் நிறையேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வீதங்கள் 3 மாத, 6 மாத முதிர்ச்சிக் காலங்களுக்கு முறையே 12.06 சதவீதத்திலிருந்து

14.70 சதவீதத்திற்கும் 13.67 சதவீதத்திலிருந்து 18.37 சதவீதத்திற்குமிடையே வேறுபட்டன.

1994 இல் நடுத்தர, நீண்டகால வெளிநாட்டு அரச படுகடனின் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ. 186,200 இலட்சமாகும். பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகையில் செயற்றிட்டக் கடன்கள் 70.2 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மிகுதித் தொகை செயற்றிட்டமல்லாக் கடன்கள் தொடர்பானதாக விளங்கியது. 1994 இன் வெளிநாட்டு அரச படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவும் ஏனைய கட்டணங்களும் (நிருவாகக் கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக) ரூ. 55,843 இலட்சமாகும்.

## பிரதேச அலுவலகங்கள் – மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

1994 இல் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட வழமையான மத்திய வங்கித் தொழில் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு மேலதிகமாக அவற்றினது அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகள் நாணயத் தொழிற்பாடுகள், காசோலைத் தீர்ப்பனவு, தரவுச் சேகரிப்பு, நன்மை பெறுவோர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், பி. கி. அ. வங்கிகளின் நடவடிக்கைகளைப் பரிசோதித்தல் சம்பந்தப்பட்ட இடங்களில் உள்ள அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்கள், முகவர்கள், அமைப்புக்களுடன் இணைப்பினை ஏற்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

மாத்தறைப் பிரதேச அலுவலகம் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், உள்நாட்டு உண்டியல் திட்டம், நாடளாவிய சுய தொழில் வாய்ப்புக் கொடுகடன் திட்டம், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம், தென் மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது மாத்தறை, அம்பாந்தோட்டை பி.கி.அ. வங்கிகளின் மூன்று வங்கிக் கிளைகளின் பரிசோதனையையும் மேற்கொண்டது.

அநுராதபுர பிரதேச அலுவலகம் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து வேளாண்மை, பண்ணை அபிவிருத்தி, அரிசி பதனிடல் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் பற்றி 1,400 இற்கு மேற்பட்ட எதிர்கால கடன் பெறுநர்களுக்கு 43 நன்மை பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. குருநாகல், புத்தளம், பொலநறுவை, அநுராதபுரம் பி. கி. அ. வங்கிகளின் ஒன்பது கிளைகளின் பரிசோதனையையும் இது மேற்கொண்டது.

1994 இல் மாத்தளை பிரதேச அலுவலகம் சிறிய அளவிலான உற்பத்தி, சந்தைப்படுத்தல், பண்ணை அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் பற்றி 1,362 எதிர்காலக் கடன் பெறுநர்களுக்கு 20 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. கொடுகடன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்கும் நோக்குடன் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள எதிர்காலக்

கடன்பெறுநர்களிடையே பெருந்தொகையான "சனகமுவ" கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம், நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் திட்டம் என்பன தொடர்பான அதன் நடவடிக்கைகளையும் பிரதேச அலுவலகம் தொடர்ந்து மேற்கொண்டது. மாத்தளை, நுவரெலியா பி.கி.அ. வங்கிக் கிளைகளின் பரிசோதனையையும் இவ்வலுவலகம் மேற்கொண்டது.

மத்திய வங்கித் தொழில் தொழிற்பாடுகளை மேற்கொள்கையில் மாத்தறை, அநுராதபுர பிரதேச அலுவலகங்கள் நாணய மாற்று வசதிகளை வழங்குவதனைத் தொடர்ந்து மேற்கொண்டன. மேலும் பிரதேச அலுவலகங்கள் பிரதேச காசோலைத் தீர்ப்பனவு வசதிகளையும் வழங்கின. ரூ. 19,890 இலட்சம் மொத்தப் பெறுமதிகொண்ட 156,950 காசோலைகள் மாத்தறையில் உள்ள பிரதேச காசோலைத் தீர்வகங்களூடாகவும் ரூ. 14,470 இலட்சம் கொண்ட 123,913 காசோலைகள் அநுராதபுர காசோலைத் தீர்வகங்களூடாகவும் ரூ. 165,050 இலட்சம் பெறுமதி கொண்ட 602,604 காசோலைகள் கண்டி மாத்தளைப் பிரதேச அலுவலகத்தின் காசோலைத் தீர்வகங்களூடாகவும் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## செயலகம்

செயலகத் திணைக்களம் நிதி, சட்டப் பணிகள், வழங்கல்கள், பயணம் மற்றும் ஏனைய பணிகள் ஆகிய விடயங்களில் வங்கியின் அனைத்து நிருவாகப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டது.

நாணய விதிச் சட்டத்தின் வங்கித்தொழிற் சட்டம், திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணைகள் கட்டளைச் சட்டம், கொடுகடன் தகவல் பணியகம் என்பனவற்றில் திருத்தங்களைச் செய்வதற்கான சட்டங்களைத் தயாரிப்பதில் சட்டப்பிரிவு மும்முரமாக ஈடுபட்டிருந்தது.

## தகவலும் வெளியீடுகளும்

தகவல் சேகரிப்பாளர் மற்றும் பரப்புபவர் என்ற வகையில் தகவல் திணைக்களம் மத்திய வங்கி பணியில் தொடர்ந்து முதன்மைப் பங்கினை வகித்தது. தகவல் சேகரிப்புச் செயல்முறையின்போது உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமூக பொருளாதார அபிவிருத்தியினை உள்ளடக்குவதில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதுடன் பொருளாதார அபிவிருத்தியினை ஆய்வு செய்வதில் ஈடுபாடுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர், ஆய்வாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் வெளியிடப்பட்டதும் வெளியிடப்படாததுமான விடயங்களை வழங்கியது. தகவல் திணைக்களத்தினூடாகப் பின்வரும் மத்திய வங்கி வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

1. ஆண்டறிக்கை 1993 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

2. பொருளாதார அளவீடு - 1994 இன் முதலரைப்பகுதி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

3. பொருளாதாரச் செய்தித்திரட்டு ஆங்கிலம் - இருமாதமொருமுறை

4. மாதாந்தச் செய்தித் திரட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

5. சமூகப் பொருளாதாரத் தரவு - மடிப்பு 1994 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

6. சட்டகன தொகுதி 7 உம் 8 உம் (சிங்களம்)

7. பருவகால ஆய்வுகள் 23 உம் 24 உம்

8. இலங்கையில் வளர்ச்சியும் சமூக முன்னேற்றமும் (சிங்களம்)

மேலதிகமாகத் திணைக்களம் தனது சொந்த வெளியீடுகளான சட்டகன, செய்தி அளவீடு, வங்கி புவத் ஆகிய சஞ்சிகைகளையும் தொடர்ந்தும் வெளியிட்டது.

பொதுமக்களுக்குத் தகவல்களைப் பரப்புவதற்கு கட்புல, செவிப்புல சாதனங்கள், பத்திரிகை வெளியீடுகள், கருத்தரங்குகள், புத்தகக் கண்காட்சிகள் என்பனவற்றையும் திணைக்களம் தொடர்ந்து பயன்படுத்தியது.

புதிய நூல்கள், சஞ்சிகைகள் துண்டு வெளியீடுகள் என்பனவற்றை மேலதிகமாகச் சேர்த்துக்கொண்டதன் மூலம் நூலகம் தனது தகவல் தரத்தினை மேலும் வலுப்படுத்தியது. இவ்வாண்டில் நூலகம் 287 நூல்களையும் 121 துண்டு வெளியீடுகளையும் சேர்த்துக்கொண்டதுடன் 236 சஞ்சிகைகளுக்கு உதவு தெகையைச் செலுத்தியது. வங்கிகள், ஏனைய நூலகங்கள், நிறுவனங்கள் என்பனவற்றிடமிருந்து அது 244 நூல்களையும் துண்டு வெளியீடுகளையும் கொடைகளாகவும் மாற்றல்களாகவும் பெற்றுக் கொண்டது. திணைக்களம் 1994 இல் இலங்கை பற்றிய அரிய நூல்களின் கண்காட்சி ஒன்றினையும் ஒழுங்குசெய்தது.

திணைக்களத்தின் வீடியோ பிரிவு ஊழியர் சேமநிதியம் மற்றும் தகவல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பான செய்திப் படங்களைத் தயாரித்தது. இது 16 கருத்தரங்குகளையும் மத்திய வங்கியின் முக்கிய நிகழ்வுகளையும் உள்ளடக்கியிருந்தது. கட்புல ஓவியப்பிரிவு முகப்பு அட்டைப்படங்களையும், கையேடுகளையும் விளம்பரச் சுவரொட்டிகளையும் வடிவமைத்தது. திணைக்களம், உணவு வேளாண்மை அமைப்பின் 50 ஆவது நிறைவு விழா தொடர்பாக வெளியிடப்படவிருக்கும் புதிய ரூ. 2/- நாணயக்குத்தியை வடிவமைக்கும் வேலையைப் பூர்த்தி செய்துள்ளது.

திணைக்களத்தின் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் பெருமளவு எண்ணிக்கையான மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவர்ந்துள்ளன. திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 31 உள்ளக நிகழ்ச்சித் திட்டங்களில் 1,902 இற்கு மேற்பட்ட மாணவர்களும் 141 ஆசிரியர்களும் கலந்துகொண்ட வேளையில் கம்பகா, நீர்கொழும்பு, பியகம, மினுவாங்கொடை, பிலியந்தலை மற்றும் கோமாகம ஆகிய கல்விப் பிரிவுகளிலுள்ள 60 பள்ளிக்கூடங்களிலிருந்து மொத்தமாக 3,120 மாணவர்கள் வெளியிட நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொண்டனர்.

மத்திய வங்கியின் அச்சிடல் வேலைகளில் 90 சதவீதத்திற்கு மேலானவை மத்திய வங்கியின் அச்சகத்தினால் கையாளப்படுகின்றன. இவ்வாண்டில் அச்சகம் 348 அச்சிடல் வேலைகளை வெற்றிகரமாக முடித்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

வங்கியின் அலுவலர்கள் தாமாகவும் ஏனைய நிறுவனங்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டமைக்காகவும் பலதரப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். அவை கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளையும் பெருமளவில் கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளையும் உள்டக்கியிருந்தன.

## அளவீடுகளும் தரவுச் சேகரிப்பும்

**வறிய மக்களை சிறப்பாகக் கருத்திற் கொண்ட கடன் தேவைகளின் அளவீடு 1992 / 1993**

1992/93 இல் நடாத்தப்பட்ட வறிய மக்களை சிறப்பாகக் கருத்திற்கொண்ட கடன் தேவைப்பாடுகளின் அளவீடுகள் மீதான வெளிக்கள வேலையும் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பட்டியலிடும் வேலையும் இவ்வாண்டில் முற்றுப்பெற்றன. இந்த அளவீட்டின் முக்கிய குறிக்கோள் முறைசார்ந்த கடன் வழங்கலுக்கான தேசிய கடன் கொள்கை ஒன்றினை வடிவமைப்பதற்காக சிறப்பாகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய துறைகளுக்கு முக்கியத்துவமளித்து நாட்டின் கொடுகடன் தேவைகளை மதிப்பிடுவதாகும். மேலும் நிறுவனக் கடன்கள் பலதரப்பட்ட வருவாய்க் குழுக்களை எவ்வளவு தூரம் அடைந்துள்ளன என்பதனையும் இக்கடன்கள் வருவாய் உருவாக்கத்திற்காக எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் அறிந்துகொள்வதும் இவ்வளவீட்டின் ஏனைய குறிக்கோள்களாகும்.

இக்குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு, கடன்களின் மூலம், கடன்களின் பயன்பாடு, கொடுகடன் தேவை, தொழில் முயற்சி, வருவாய் உருவாக்க நடவடிக்கைகள் மற்றும் கடனை மீளச் செலுத்தல் என்பனவற்றின் மீது நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ள தகவல்கள் 33,000 மாதிரிக் குடியிருப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன. அளவீடு செய்யப்பட்ட குடும்பங்களினது அனைத்தையும் உள்ளடக்கிய சமூக பொருளாதார நிலைமையினை வழங்கும் பொருட்டு குடித்தொகைப் பண்புகள், வீடமைப்பு நிலைமைகள், நிலப்பயன்பாடு, தொழிற்படை, தொழில்வாய்ப்பு, தொழிலின்மை, குடியிருப்பாளர் வருவாய், சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகள் போன்றன குடியிருப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன.

கொடுகடன் இணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கொள்கை வகுக்கும் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதற்காக தற்காலிக தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான இடைக்கால அறிக்கைகளைத் திணைக்களம் தயாரித்தது. தரவுகளின் பகுப்பாய்வும் அளவீடு பற்றிய இறுதி அறிக்கையைத் தயாரிப்பதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டம்

1978 இல் தொடக்கிவைக்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டம் 1994 இலும் தொடர்ந்ததின் மூலம் அதனது பதினாறாவது ஆண்டு தொழிற்பாட்டினை பூர்த்திசெய்துள்ளது. நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், பல பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முதன்மை வேளாண்மை உள்ளீடுகளின் செலவுகள், முறைசாராத் துறையிலுள்ள நெல், தேயிலை, இறப்பர், தெங்கு பயிர்ச் செய்கைகளினதும் சிறிய அளவிலான கட்டுமான நடவடிக்கைகளினதும் நாளாந்த கூலிவீதங்கள் என்பனவற்றினதும் தரவுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களில் கிரமமான அடிப்படையில் தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழான தகவல்கள் வடமாகாணம் தவிர்ந்த நாடுமுழுவதிலும் பரந்துள்ள நிலையங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அரச பள்ளிக்கூட ஆசிரியர்களினால் சேகரிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகள் விலைகளும் கூலிகளும் புள்ளிவிபரவியல் என்ற வெளியீட்டில் தரப்படுகின்றன.

நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் முறையில் தொழிற்படுகின்றதான அதன் ஆரம்ப குறிக்கோளினை நிறைவேற்றும் நோக்குடன், அண்மைய எதிர்காலத்தில் உற்பத்திப் போக்குகள் எவ்வாறு இருக்கக்கூடும் என்பதன் மீதான தகவல்களையும், உற்பத்தியாளர் விலைகளில் தளம்பல்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களையும் சேகரிக்கும் விதத்தில் 1994 இல் இத்திட்டத்தின் செயற்பரப்பு விரிவுபடுத்தப்பட்டது.

## தேசிய கணக்குகள்

தேசிய கணக்குகளை மதிப்பிடலுடன் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளின் சேகரிப்பையும் தொகுப்பையும் இவை உள்ளடக்கியிருந்தன. இயலுமானவிடத்து தரவுகள் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. தேசிய கணக்குகளின் காலாண்டு மதிப்பீடுகள் 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டன. மதிப்பீட்டு நடைமுறைகளில் மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை, மிக அண்மிய ஆண்டினை அதாவது 1993 இனை அடிப்படையாகக் கொண்ட தேசிய வருமானக் கணக்குகளின் தொடரினை நோக்கிய நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக அமையும். 1993 இல் ஐக்கிய நாடுகள் புள்ளி விபரவியல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகளின் திருந்திய முறையில் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தங்களைச் செய்வதில் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

## இறக்குமதிகளின் கண்காணிப்பு

இறக்குமதி எதிர்வுகூறல் நோக்கத்திற்காக வர்த்தக வங்கிகளிலிருந்தான நாணயக் கடிதங்கள் பற்றி வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்ந்தும் இறக்குமதிகளைக் கண்காணித்தது.

### தொழில்நிலைப் புள்ளிவிபரம்

அரசதுறையின் தொழில் நிலை மீதான ஆண்டு அளவீடு திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அளவீட்டின் குறிக்கோளானது அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்துறை என்பனவற்றின் தொழில் நிலைப் போக்குகளை உறுதியாக அறிந்துகொள்வதாகும். மேலதிகமாக, முறைசார்ந்த தனியார்துறையின் தொழில்நிலைப் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்வதற்காக ஊழியர் சேமநிதியம், மற்றும் ஏனைய சேம நிதியங்கள் போன்ற நிருவாக பதிவேடுகளிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

## தரவு செய்முறைப்படுத்தல்

நிதியியல் முறையில் தோன்றியுள்ள தேவைகளை ஈடுசெய்வதற்காக மத்திய வங்கி அதன் தொழிற்பாடுகளை நவீனப்படுத்துகின்றது. தகவல் தொழில் நுட்பவியலில் காணப்படும் தற்போதைய அபிவிருத்திகளைப் பயன்படுத்தி வங்கியின் தகைமை, பயனாற்றல், உற்பத்தியாக்கம் என்பனவற்றை முன்னேற்றும் நோக்குடன் ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப வரையறையும் நியமங்களும் இனங்காணப்பட்டுள்ளன. புதிய திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்பாக தற்போதுள்ள மையப்படுத்தப்பட்ட முறையிலிருந்து வாடிக்கையாளர் / வழங்குனர் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட மிகவும் பரந்த முறைக்கு மாறுகின்றமை விளங்கும்.

புதிய முறையை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் 1994 இல் மேற்கொள்ளப்பட்டன. புதிய சூழ்நிலைக்கு வங்கி ஊழியர்களைத் தகுதியுடையவர்களாக்குவதற்குத் தேவையான பயிற்சிகள் ஆரம்ப முன்னுரிமைத் தேவைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் காரணமாக தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட வலையமைப்பு முறையொன்று இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கி அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டது. மேலும், வங்கியின் பயன்பாட்டிற்காக 100 தனியாள் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. தனியாள் கணனியை உட்பிரதேச வலையமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான திட்டமிடல் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்போதுள்ள கணனிமயமாக்கப்பட்ட பிரயோக முறைகளை உயர்த்துவதனையும், முன்னேற்றுவதனையும் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. தனியாள் தகவல்கள் பற்றிய சில விடயங்கள் பற்றிய பூர்வாங்க ஆய்வுகளும் நூல்நிலையத்திற்கான தகவல் மீட்பு முறையும் திணைக்களத்தின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### இலங்கை தன்னியக்கத் தீர்வகத்தின் நடவடிக்கைகள்

### I. இலங்கை தன்னியக்கத் தீர்வகத்தைத் தரமுயர்த்தல்

இலங்கை தன்னியக்கத் தீர்வகத்தில் நாளொன்றிற்கு 75,000 உச்சமட்ட அளவைக் கொண்ட சராசரி 50,000 காசோலைகளைக் கையாளுவதற்கேற்றதாக ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட தற்போதுள்ள கருவிகள் இப்பொழுது நாளாந்தம்

சராசரி 100,000 இற்கு மேற்பட்ட அளவுகளைக் கையாள்வதுடன் சில சமயங்களில் 200,000 உச்ச அளவினை அடைகின்றன. 125,000 கொண்ட உச்சமட்ட அளவு இப்பொழுது ஒரு பொதுவான தன்மையாக மாறிவிட்டது. ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான தற்போதுள்ள முறையின் மீதுள்ள இத்தகைய பெரிய கேள்வியானது, இலங்கை தன்னியக்கத் தீர்வகத்தின் தொழிற்பாடுகளினது பகுப்பின்போது வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நிகழக்கூடிய இடர்ப்பாடுகள் மற்றும் இழப்பீடுகளைக் கருத்திற்கொள்ளுமிடத்து பாதுகாப்பற்றவைகளாகக் கருதப்படுகின்றன.

இதன்காரணமாக, ஆய்விற்குரிய ஆண்டில், இலங்கைத் தன்னியக்கத் தீர்வகத்தின் கருவிகளைத் தரமுயர்த்துவதற்காக மத்திய வங்கியினால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உத்தேசத் தரமுயர்த்தலின் கீழ் தற்போது நிறுவப்பட்டுள்ள அமைப்பிற்குப் பதிலாக முதன்மைக் கட்டடத்தில் (கொழும்பு) நவீன தன்னியக்க முறையொன்று நிறுவப்படும். புதிய கருவி நாளாந்தம் சராசரி 150,000 காசோலைகளைக் கையாளக் கூடியதாகவும் உச்ச அளவு சராசரி அளவிலான 150,000 மேல் 100 சதவீதத்திற்குக் குறையாததாகவும் இருக்கும். உத்தேச தரமுயர்த்தல், தற்போதுள்ள கருவியை அதன் தற்போதைய இடத்திலிருந்து அகற்றுவதுடன் அதனை முதலாவது பிரதேச நிலையமாக கண்டியில் மீளநிறுவுவதையும் உள்ளடக்கியுள்ளது. இது பக்கத்துணை வசதிகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

## II. இலங்கையில் வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைகள்

ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கை தன்னியக்க தீர்வகம் அதன் வங்கிகளுக்கிடையேயான இணைக்கப்படாத கொடுப்பனவு முறையின் செயற்பரப்பை விரிவுபடுத்தியது.

நாளொன்றுக்கு ஆறு வங்கிகளுடனும் 20 கொடுக்கல் வாங்கல்களுடனும் 1993 இல் தொடங்கப்பட்ட இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை தற்போது அனைத்து வர்த்தக வங்கிகளுடன் நாளொன்றுக்கு இம்முறையினூடாக ஏறத்தாழ 1,000 இற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வருகின்றது.

1994 இல் இலங்கையின் வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையின் வசதி பின்வரும் பரந்தளவிலான கொடுக்கல் வாங்கல் முறைகளை உள்ளடக்குகின்றது.

(அ) சம்பளங்களின் கொடுப்பனவு

(ஆ) வெளிநாட்டு நாணயத்தாள்களின் கொள்வனவு

(இ) வாடிக்கையாளர்களின் உயர்ந்த பெறுமதி (பத்து இலட்சம் ரூபாய்களுக்கு மேல்) கொடுக்கல் வாங்கல்களுக்கான பாதுகாப்புக் கொடுப்பனவு.

(ஈ) வெளிநாட்டு வரைவுகளினது தேறல்களின் தீர்ப்பனவு

பட்டியலிடுகின்ற அமைப்புக்களுடன் தற்பொழுது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நிலையியற் கட்டளைகள், காப்புறுதிக் கட்டணம், தண்ணீர் கட்டணம், தொலைபேசிக் கட்டணங்கள், மின்வலுக் கட்டணங்கள் போன்ற நேரடிப் பற்றுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கத்தக்கதாக கணனி நிகழ்ச்சித் தரவுகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. நேரடி பற்றுக் கொடுப்பனவுகள் இலங்கையின் வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவுமுறை நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நிலையாக இருக்கும். இம்முறை முழுமையாக அபிவிருத்தி செய்யப்படுமிடத்து, பட்டியலிடுகின்ற கம்பனிகள் அவற்றின் வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளை தற்போதைய முறையின்கீழ் உள்ளதிலும் பார்க்க மிக விரைவாகச் சேகரித்துக்கொள்ளமுடியும்.

## பயிற்சி

பயிற்சித் திணைக்களம், வங்கி அலுவலர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத் துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்யும் அதன் தொழிற்பாட்டினை 1994 இலும் தொடர்ந்து மேற்கொண்டது. கல்விசார்ந்த பயிற்சியானது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்களில் பட்டப்பின் படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. முதுமானி மற்றும் முனைவர் பட்டங்களுக்காக அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில் முதுமானிப் பட்டப்படிப்பிற்காக பதினொரு (11) அலுவலர்களும் முனைவர் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இரண்டு அலுவலர்களும் வெளிநாடு சென்றனர்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமான குறுகியகால பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், செயல் அமர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய கல்விசாரா பயிற்சிநெறிகள் வங்கியுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. 1994 இல் குறுகியகால பயிற்சிகளுக்காக மொத்தம் 111 அலுவலர்கள் வெளிநாடு சென்ற வேளையில் 464 அலுவலர்கள் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றினர். இன்னுமொரு 160 அலுவலர்கள் உள்நாட்டு நிறுவனங்களில் நடத்தப்பட்ட ஏனைய பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றினர்.

சில குறிப்பிட்ட வகையான ஊழியர்களின் பதவி உயர்விற்கான பரீட்சைகளையும் உயர்பதவி அலுவலர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளையும் திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது. உயர் பதவிக்கான வினைத்திறன் காண் பரீட்சையும் 1994 திசெம்பரில் நடத்தப்பட்டது.

## முகாமைத்துவக் கணக்காய்வு

1994 இல் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அதனது வேலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க வங்கியின் பல்வேறுபட்ட திணைக்களங்களில் கணக்காய்வுகளை மேற்கொண்டது. இக்கணக்காய்வுகளின்போது முறைசார்ந்த கணக்காய்வு மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடு என்பன முக்கியமாக வலியுறுத்தப்பட்டன.

கணக்காய்வாளர் பணிகளுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் முகாமைத்துவப் பணிகள் பிரிவு வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் பல முக்கிய ஆய்வுகளையும் அளவீடுகளையும் மேற்கொண்டது. இவ்வாய்வுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

(1) வங்கியில் ஊழியர்களின் பல்வேறுவகைகள் மற்றும் தரங்களின் பதவி பற்றிய ஆய்வு.

(2) அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப் பதவிக்கு ஈர்த்துக்கொள்ளல் மீதான அறிக்கை.

(3) குறிப்பிட்ட வகையான ஊழியர்களின் தொழிற்பாட்டையும் கடமைகளையும் வரைவிலக்கணப்படுத்தல்.

(4) ஊழியர் சேமநிதியின் வேலை ஒழுங்குபற்றி ஒரு ஆய்வு.

(5) குறிப்பிட்ட வகை ஊழியர்களின் பதவி உயர்விற்கான வாய்ப்புப் பற்றிய ஆய்வு.

## பணிமனை

மத்திய வங்கிப் பணிமனையில் வழமையான பேணல் மற்றும் அதனை ஒழுங்காக வைத்திருத்தல் என்பனவற்றிற்கு மேலதிகமாக 1994 இல் திணைக்களம் பின்வரும் நிருமாணச் செயற்றிட்டங்களையும் கையாண்டது.

### (1) தலைமை அலுவலகத்தை விரிவுபடுத்தல்

1992 மாச்சில் அமைச்சரவையின் தீர்மானத்தின்படி இடைநிறுத்தப்பட்டிருந்த தலைமை அலுவலகக் கட்டடத்திற்கான விரிவாக்கம் 1994 ஓகத்தில் தொடங்கியது. இக் கட்டடம் நிலத்திற்குக் கீழான மூன்று தளங்கள், நான்கு இடைத்தளங்கள் என்பனவற்றிற்குப் புறம்பாக ஒன்பது தளங்களை உள்ளடக்கியிருப்பதுடன் ஏறத்தாழ 28,000 சதுர மீற்றர் மொத்தத் தரைப் பரப்பையும் கொண்டிருக்கும். இப்புதிய கட்டடம் 1997 ஓகத்தில் பாவனைக்குத் தயாராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### (2) நுவரெலியா

15 அறைகளைக் கொண்ட விடுமுறைக்கால இல்லம் முற்றுப்பெற்றதுடன் 1994 திசெம்பரில் ஆளுநரினால் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

### (3) இராசகிரிய

வேலைத்தலத்திற்கு அருகில் கட்டப்பட்டுவரும் புதிய இரு மாடிக் கட்டடம் தொடர்பான நிருமாண வேலைகளில் 90 சதவீதத்திற்கு மேலானவை 1994 இறுதியில்

முற்றுப்பெற்றதுடன் 1995 ஏப்பிறலில் இது பாவனைக்குத் தயாராகிவிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(4) கதிர்காமம்

இரு படுக்கை அறைகளுடன் கூடிய மூன்று பிரிவுகளையும், அலுவலகக் கட்டடத்தையும் உள்ளடக்கிய யாத்திரிகர் தங்குமிடம் 1994 ஒகத்தில் முற்றுப்பெற்றதுடன் கதிர்காமம் யாத்திரைக்குப்போகும் அலுவலர்கள் இங்கு தங்கத்தக்கதாகவுமுள்ளது.

## நலன்புரி

ஆய்விற்குரிய காலப்பகுதியில் நலன்புரித் திணைக்களத்தினால் மத்திய வங்கி ஊழியர்களுக்குப் பின்வரும் நலன்புரி வசதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டன.

1. வீடமைப்புக் கடன் திட்டம்
2. அலுவலர் நன்மைகள் திட்டம்
3. ஊர்திகள் கடன் திட்டம்
4. வைத்திய நன்மைகள் திட்டம்
5. ஊழியர் சேமநிதியக் கடன் திட்டம்
6. மத்திய வங்கி உணவகம்
7. மத்திய வங்கி வைத்திய நிலையம்

இவ்வாண்டில் மேற்குறிப்பிட்ட நலன்புரி வசதிகளில் பெரும்பாலானவை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கப்பட்டன.

அரசின் பணிப்புரைக்கிணங்க உணவகம் மற்றும் வைத்திய நிலையத்தில் பணியாற்றிய அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் மத்திய வங்கியின் நிரந்தரப் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

மத்திய வங்கியின் உணவகம் ஊழியர்களுக்கு செலவு விலைகளில் தொடர்ந்து காலை உணவையும் மதிய உணவையும் வழங்கிவருகின்றது. வங்கியின் அனைத்து அலுவலர்களுக்கும் காலையிலும் மாலையிலும் கட்டணமின்றி தேநீர் வழங்கப்பட்டது. உணவகம் அலுவல்சார் நிகழ்ச்சிகளில் உணவு பரிமாற்றல் பணிகளையும் மேற்கொண்டது.

அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் வங்கியின் வைத்திய நிலையம் வைத்தியர் ஒருவரைக் கொண்டுள்ளது. வைத்திய நிலைய அலுவலர்கள் பிரிவு தகைமைபெற்ற மருத்துவ தாதிகளையும், வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரையும் உள்ளடக்கியுள்ளது. அத்தியாவசிய நோய் கண்டுபிடிப்பு

*பரிசோதனைகள் மத்திய வங்கியின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கியின் மருந்துச் சாலையில் அத்தியாவசிய மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. 1994 இல் வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணிகளின் எல்லையை விரிவுபடுத்துவதற்காக வைத்திய நிலையத்திற்கு பல நவீன நோய்க் கண்டுபிடிப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

## பாதுகாப்புப் பணிகள்

*1994 இல் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய வங்கியின் முதன்மைக் கட்டடம், இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிக் கட்டடம், கார்க்கோபோட் டெஸ்பாச், சிலின்கோ, சாலிமார் ஆகிய கட்டடங்களிலமைந்துள்ள திணைக்களங்கள் என்பனவற்றிற்குப் பாதுகாப்புப் பணிகளை வழங்கியது. அத்துடன் பாதுகாப்பு வலையமைப்பு அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள பிரதேச அலுவலகங்களை உள்ளடக்கியிருந்த வேளையில் களனி மற்றும் லயாட்ஸ் புரோட்வேயிலுள்ள களஞ்சியசாலைகள், கதிர்காமம் சுற்றுலாவிடுதி, நுவரெலியா விடுமுறைத் தங்குமிடம், கண்டிக் கட்டடப்பகுதி என்பனவும் கவனிக்கப்பட்டன. ஆளுநரின் வதிவிடத்திற்கும் மூத்த துணை ஆளுநரின் வதிவிடத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.மேலதிகமாக வங்கியிலிருந்தும் வங்கிக்கும் நாணயங்களையும் தங்கத்தையும் கொண்டு செல்லும்போதும் திணைக்களம் பாதுகாப்பு வழங்கியதுடன் ஆளுநருக்கும் மத்திய வங்கிக்கு வருகைதரும் வெளிநாட்டு பேராளர்களுக்கும் ஆளணிப் பாதுகாப்பையும் வழங்குகின்றது.*

*திணைக்களத்திலுள்ள பாதுகாப்பு ஆளணியினரின் திறமையையும் அறிவையும் அதிகரிக்கும் பொருட்டு இவ்வாண்டுக் காலத்தில் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்ட பாதுகாப்பு சம்பந்தமான பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு திணைக்களம் உதவி வழங்கியது.*

## ஆளணி

**1994 இல் ஆளுநர் திரு. எச். பீ. திசநாயக்க பின்வரும் கூட்டங்களில் கலந்துகொண்டார்.**

*1. தாய்லாந்தின் பாங்கொங்கில் நடைபெற்ற 30 ஆவது அப்ரகா நிறைவேற்றுக் குழுக் கூட்டம்.*

*2. பிலிப்பீன்சின் மனிலாவில் நடைபெற்ற அபிவிருத்தி உபாயங்கள் மீதான 6 ஆவது ஆசிய அபிவிருத்தி வங்கி வட்டமேசை.*

*3. பிரான்சில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்கள் சபையின் 27 ஆவது ஆண்டுக் கூட்டம்.*

*4. லண்டனில் நடைபெற்ற இங்கிலாந்து வங்கியின் முன்னூறாண்டு நிறைவுக் கூட்டம், மற்றும் சுவிற்சர்லாந்தில் பசிலில் நடைபெற்ற சருவதேச*

தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் 64 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம்.

5. தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்ற அப்ரகா நிறைவேற்றுக் குழு பூர்வாங்கக் கலந்துரையாடல், மற்றும் ஸ்பெயினில் மட்றிட்டில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம் / உலக வங்கி 1994 ஆண்டுக் குழுக்கூட்டங்கள்.

6. நேபாளத்தில் காத்மண்டுவில் நடைபெற்ற 31 ஆவது அப்ரகா நிறைவேற்றுக் குழுக் கூட்டம்.

**நியமனங்கள்**

1. தரவு செய்முறைப்படுத்தல் பணிப்பாளர் முனைவர் எஸ். எஸ். கொலம்பகே 1994 சனவரி 10 ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2. புள்ளிவிபரவியல் பணிப்பாளர் முனைவர் எல். எல். குணரத்ன 1994 சனவரி 10 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

3. தரவு செய்முறைப்படுத்தல் துணைப் பணிப்பாளர் திருமதி எஸ். என். பர்னாந்து 1994 சனவரி 10 ஆம் நாளிலிருந்து தரவுச் செய்முறைப்படுத்தல் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4. வங்கித் தொழில் அபிவிருத்தி துணைப் பணிப்பாளர் திரு. ஜே. எம். ரி. பீ. ஜயசுந்தர 1994 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. ஊழியர் சேமநிதி துணைக் கண்காணிப்பாளர் திரு. எம். எஸ். சிறிபாலா 1994 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து நிறுவனத் திணைக்களத்திற்கு பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. கிராமியக் கொடுகடன் துணைப் பணிப்பாளர் திரு. எம். இராமநாதன் 1994 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. நாணயத் திணைக்கள மேலதிக கண்காணிப்பாளர் திரு. சி. கே. பரணவிதான 1994 யூன் 24 ஆம் நாளிலிருந்து செயலகத் திணைக்களத்திற்கு மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

8. திரு. வை. ஏ. பியதிஸ்ஸ சிறப்பு அலுவலர் எனப் பதவி குறிக்கப்பட்டு (மூலதன நிதியியல் சந்தை அபிவிருத்தி) 1994 ஓகத்து 02 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

9. மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. ஜே. ஈ. டீ. கருணாரத்ன 1994 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத்

திணைக்களத்திற்கு மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

10. வங்கி மேற்பார்வையின் பதில் மேலதிக பணிப்பாளர் திரு. எம். இராமநாதன் 1994 திசெம்பர் 01 ஆம் நாளிலிருந்து பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையிலுள்ள அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றிற்கும் பன்னாட்டு அமைப்புக்களுடன் செயற்படுவதற்காகவும் விடுவிக்கப்பட்டனர்.

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன செயலாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி, திட்டமிடல், இன அலுவல்கள், தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை என்பனவற்றிற்கான மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

முனைவர் (திருமதி) ஆர். ஜெயமகா நிதி, திட்டமிடல், இன அலுவல்கள், தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு.

முனைவர் டீ. ஜே. ஜீ. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகவும் பணிப்பாளராகவும் கடமையாற்றுவதற்காக நிதி, திட்டமிடல், இன அலுவல்கள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு.

திருவாளர்கள் சி. லியனகே, டபிள்யூ. ஏ. டீ. ஈ. வீரசிங்க, என். எம். தயாரத்ன, சி. த. எஸ். ஜயவர்த்தன ஆகியோர் நிதி, திட்டமிடல், இனஅலுவல்கள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு

**ஓய்வுபெறல் / பதவிவிலகல்**

ஊழியர் சேமநிதியத்தின் மேலதிக கண்காணிப்பாளர் திருமதி இசட். லொக்குகே 1994 யூலை 31 ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நிறுவனத் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் திரு. பீ. எம். லக்டாவெல 1994 ஒற்றோபர் 7 ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.